நகர சபை, யாழ்ப்பாணம்.

Registered as a News Paper in Sri lanka

விலை : ரூபா 10.00

தினப்பதிப்பு
# தினமுரசு
THINAMURASU

யாழ் நகரில் ஒரு வான்வழி நிலையம்
SPICE TRAVELS & TOURS (PVT) LTD
IATA




(C/490)
412, First Floor, Hospital Road, Jaffna.
(Adjoining Sangeetha Mobile Links)
Fly Line
Keethan - 0773 916 416
Tharshy - 0773 915 530

முரசு – 01 திருவள்ளுவர் ஆண்டு 2042 பங்குனி 08 செவ்வாய்க்கிழமை (22.03.2011) பக்கங்கள் 12 ஓசை – 173

## பேச்சுவார்த்தையில் இந்திய அனுசரணை வேண்டும் சங்கடத்தில் சிக்கவைக்க புலிகளின் வியூகம்

### பரபரப்பூட்டுகிறது "த ஹிந்து" பத்திரிகை



(கொழும்பு)

புலிகளுக்கும், இலங்கை அரசாங்கத்திற்கும் இடையில் மேற்கொள்ளப்பட்ட சமாதான முயற்சிகளில் ஏற்பட்டு வந்த கடும் அழுத்தங்கள் காரணமாகவே இந்தியா இவ்விவகாரத்தில் தலையிடுவதில்லையென தான் மேற்கொண்டிருந்த உறுதியான தீர்மானத்தை மீளாய்வு செய்யும் முடிவை எடுத்ததாகத் தெரிவிக்கப்படுகிறது.

விக்கிலீக்ஸினால் வெளியிடப்பட்ட தகவற் குறிப்புகளின் அடிப்படையில் வெளியாகியுள்ள இச்செய்தியை இந்தியாவில் இருந்து வெளியாகும் "த ஹிந்து" பத்திரிகை வெளியிட்டுள்ளது. இது குறித்து இப் பத்திரிகையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

2005ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 14ஆம் திகதி புதுடில்லியிலுள்ள அமெரிக்கத் தூதரகத்தினால் (11ஆம் பக்கம் பார்க்க)

# வடபகுதி மீனவர் பிரச்சினை கொழும்பில் மந்திராலோசனை

### இணக்கத் தீர்வு குறித்து அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவுடன் பேச்சு



(கொழும்பு)

பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அவர்களை யாழ்ப்பாணம் கிளிநொச்சி மாவட்டங்களின் கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசப் பிரதிநிதிகள் சந்தித்துக் கலந்துரையாடியுள்ளனர். (11ஆம் பக்கம் பார்க்க)

## சுவீடன் பெண்ணுக்கு நடந்தது என்ன? அவரைத் தேடுகிறது "இன்டர்போல்"



(சுவீடன்)

சுவீடன் நாட்டைச் சேர்ந்த பெண்ணொருவர் இலங்கையில் காணாமல் போயுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

28 வயதான மேரி ஜோன்ஸன் சிலேன் எனும் இப்பெண் சுவீடனின் மத்திய பகுதியான வெஸ்டர்கொட்லன்ட்டின் வார்கார்டா நகரைச் சேர்ந்தவர். (12ஆம் பக்கம் பார்க்க)

## அரியாலை கிழக்கு நோக்கி பயணிகள் போக்குவரத்துச் சேவை



(யாழ்ப்பாணம்)

பாரம்பரிய கைத்தொழில் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் ஏற்பாட்டில் மீளக் குடியமர்த்தப்பட்ட பூம்புகார்-நாவலடிப் பகுதி மக்களின் போக்குவரத்திற்காக மாநகரசபையின் பேருந்து சேவை நேற்று ஆரம்பித்து வைக்கப்பட்டது.

ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் நல்லூர்த் தொகுதி அமைப்பாளர் அ.ரவீந்திரதாசன், (11ஆம் பக்கம் பார்க்க)

## அரசியல்வாதிகளுக்கு ஆர்வம் எதுவும் இல்லை



(கொழும்பு)

கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக் குழு முன்னிலையில் சில முக்கிய அரசியல் பிரமுகர்கள் சாட்சியமளிப்பதற்கு ஆர்வம் காட்டவில்லை என ஆணைக்குழுவின் முக்கியஸ்தர் ஒருவர் தெரிவித்தார்.

முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா (11ஆம் பக்கம் பார்க்க)

## கூட்டுப்படைகளின் பிரதான இலக்கு என்ன? கடாபியின் வாசஸ்தலம் மீது குண்டு வீச்சு

(திரிபோலி)

லிபிய தலைநகர் திரிபோலியில் அமைந்துள்ள லிபிய ஜனாதிபதி கேணல் கடாபியின் வளாகக் கட்டடம் மீது மேற்குலக நாடுகள் வான் தாக்குதல்களை மேற்கொண்டுள்ளன.

லிபிய ஜனாதிபதி கேணல் கடாபியின் வளாகக் கட்டடத்தை இலக்கு வைத்துத் தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளதை (11ஆம் பக்கம் பார்க்க)

## மன்னாரில் கடல்கொந்தளிப்பு

(மன்னார்)

மன்னார் மாவட்டத்தின் சில பகுதிகளில் கடல் நீரின் மட்டம் அதிகரித்துக் காணப்படுகின்றது. அத்துடன் கடும் காற்று மற்றும் அலை வீசுகின்றமையினால் (11ஆம் பக்கம் பார்க்க)

# யுத்தத்தின் இறுதி நாட்களில் புலிகளை மீட்க அமெரிக்க அரசு முயற்சிகள் மேற்கொண்டதா?

## இறுதிவரை அமெரிக்காவை நம்பியிருந்தார் நடேசன்

(கொழும்பு)

இலங்கையின் வடபகுதியில் இடம் பெற்ற யுத்தத்தின் கடைசிக் காலகட்டத்தில் புலிகளின் உறுப்பினர்கள் பத்திரமாக வெளியேற்றப்படுவார்கள் என்று அமெரிக்க ராஜாங்கத் திணைக்களம் உறுதியளித்திருந்ததாக அமெரிக்காவில் நிலைகொண்டிருந்த முன்னாள் புலிகள் இயக்க உறுப்பினர் ஒருவர் தெரிவித்திருந்தார்.

அவர் இது பற்றிப் புலிகளின் அரசியல் துறைப் பொறுப்பாளர் நடேசனிடம் குறிப்பிட்டதாகவும், நடேசன் இது தொடர்பாக தன்னுடன் ஆலோசனை நடத்தியதாகவும் சிரேஷ்ட ஊடகவியலாளர் ஒருவர் தெரிவித்துள்ளார். இது குறித்து அவதானமாகச் செயற்படுமாறு, தான் நடேசனை அறிவுறுத்தியதாகவும், அந்த ஊடகவியலாளர் மேலும் தெரிவித்துள்ளார். அது மட்டுமன்றித் தனது பாதுகாப்புக்கு உத்தரவாதமளிக்கப்படும் பட்சத்தில், எந்த ஒரு சர்வதேச விசாரணையிலும் இது குறித்துச் சத்தியக்கடதாசி ஒன்றை சமர்ப்பிக்கவும் தயார் (12ஆம் பக்கம் பார்க்க)

# வேம்படி மகளிர் கல்லூரியின் அபிவிருத்திக்கு யாழ். மாநகர மேயரின் பங்கு அளப்பரியது

## பெற்றோருக்கான வருடாந்த ஒன்று கூடலில் புகழாரம்



(யாழ்ப்பாணம்)

யாழ். வேம்படி மகளிர் பாடசாலையின் அபிவிருத்திக்கு யாழ். மாநகர மேயர் திருமதி யோ. பற்குணராசா அவர்கள் அபிவிருத்திக் குழு உறுப்பினர் என்ற பதவியை வெறுமனே கௌரவ வேடமாக ஏற்காது முழுமையான கதா பாத்திரமாக மாறி ஆற்றிவரும் சேவை அளப்பரியது என அபிவிருத்திக்குழு செயலாளர் எஸ். சுபசீலன் தெரிவித்தார்.

கடந்த ஞாயிற்றுக்கிழமை வேம்படி மகளிர் உயர்தர பாடசாலைப்பெற்றோர்களிற்கான வருடாந்த ஒன்று கூடல் அதிபர் திருமதி கே. பொன்னம்பலம் தலைமையில் நடைபெற்றது.

இந்த ஒன்று கூடலின் போது அண்மையில் ஆரம்பிக்கப்பட்ட பாடசாலை அபிவிருத்திக் குழு தொடர்பாக அதன் செயலாளர், பெற்றோர்களுற்கு விளக்கமளித்து உரையாற்றும் போதே மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

உயர் மட்டத்தீர்மானம் எடுக்கும் குழுவான எமது பாடசாலை அபிவிருத்திக் குழு, உறுப்பினர்களாக நியமிக்கப்பட்ட அனைவரும் சம்பிரதாய பூர்வமாக ஒன்று கூடி தேநீர் விருந்துபசாரத்தில் ஈடுபடுபவர்கள் அல்லர். அதிபரிடம் பாடசாலை அனுமதி யாருக்காகவும் கோருவதில்லை, பாடசாலை உள்ளார்ந்த முகாமைத்துவ செயற்பாடுகளில் தலையிடுவதில்லை என்ற தீர்மானங்களை எடுத்துக் கொண்டே இரவிரவாக பாடசாலை அபிவிருத்திப் பணிகளில் ஈடுபடுகின்றனர். இந்த வகையில் யாழ். நகர மாதாவும் எமது வேம்படியின் மகளுமான திருமதி யோகேஸ்வரி பற்குணராசா அவர்கள் சிங்கப்பூராகும் யாழ்ப்பாணம், காபெற் வீதிகளாகும் யாழ். மாநகர வீதிகள் என மேயரின் நாளாந்தப் பணிகள் தொடர்ந்திருக்கையில், அவரின் ஆழ்ந்த மனதில், தான் கற்ற வேம்படியின் அபிவிருத்திக்கான பதிவுகள் ஆழப்பதிந்திருப்பதை அவதானிக்கக் கூடியதாகவுள்ளது. அவரது அவசரமான பொழுதுகளில் வரும் அபிவிருத்திச் செயலரின் தவறிய தொலைபேசி அழைப்புக்களிற்கு, அன்றைய தினமே பதிலிறுக்க அவர் தவறுவதில்லை. எமது சக்திக்கப் பாற்பட்ட பல்வேறு அசாதாரணமான உட்பாந்திரமான திட்டங்களை தனது வல்லமையால் சாத்தியமாக்குவதாகவும் தெரிவித்தார்.

இதில் யாழ்.வலய பிரதிக்கல்விப் பணிப்பாளர் எஸ். இராஜலிங்கம், 'அதிகாரம் மிக்க பாடசாலை அபிவிருத்திக்குழு' என்கின்ற தலைப்பில் விளக்க உரை நிகழ்த்தினார். அதனை அடுத்து பாடசாலை அபிவிருத்திச் சங்க செயலாளர் திரு. கே. கனகரட்ணம் தமது உரையில், கடந்த ஐந்து தடவைகள் க.பொ.த சாதாரணதரத்தில் நூறு வீத சித்தியைப் பெற்று, எமது பாடசாலை சாதனை படைத்துள்ளது எனத் தெரிவித்தார்.

## சட்டவிரோத மாட்டிறைச்சி யாழ். பொலிஸாரால் மீட்பு

(யாழ்ப்பாணம்)

யாழ். குருநகர்ப்பகுதியில் 30 கிலோக்கிராம் மாட்டிறைச்சியினை அனுமதிப்பத்திரம் இன்றி தன்னகத்தே வைத்திருந்த ஒருவரை அப்பகுதி பிரதேச மக்கள் கொடுத்த இரகசிய தகவலின் அடிப்படையில் யாழ்ப்பாண பொலிஸார் நேற்றுக்கைது செய்தனர்.

கைது செய்யப்பட்ட நபர் யாழ்ப்பாண நீதிவான் நீதிமன்ற நீதிபதி அ. ஆனந்தராசா முன்னிலையில் ஆஜர்படுத்தப்பட்டார்.

குற்றஞ்சாட்டப்பட்ட நபர் குற்றத்தினை ஒப்புக் கொண்டதனால், இவருக்கு பத்தாயிரம் ரூபா அபராதம் விதித்து தீர்ப்பளித்தார். (மி)

## கடவுச்சீட்டு மோசடி; இலங்கையர் ஒருவர் கைது

புலிகள் இயக்கத்துடன் தொடர்புடையவர் என சந்தேகிக்கும் இலங்கையர் ஒருவர் தென்னிந்தியப் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.போலியான பெயர், முகவரிகளுடன் வெளிநாட்டுக்குச் செல்வதற்காக கடவுச்சீட்டுக்கு விண்ணப்பித்த போதே அவர் தொடர்பான விபரங்களை பொலிஸார் ஆராய்ந்துள்ளனர்.

இதனையடுத்து, முகவரின் ஊடாக போலியான பெயரில் கடவுச்சீட்டுக்கு விண்ணப்பித்துள்ளதாக பெரம்பலூர் பொலிஸாருக்கு கிடைத்த தகவலின் அடிப்படையிலேயே அவர் கைது செய்யப்பட்டார்.

கைதுசெய்யப்பட்டவரிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளின் அடிப்படையில், அவருக்கு போலிக் கடவுச்சீட்டை பெற்றுக்கொடுக்க முனைந்த இந்தியர்கள் இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இவர்களுள் நீண்ட காலமாக போலிக் கடவுச்சீட்டுக்களை பெற்றுக்கொடுக்கும் நடவடிக்கைகளை மேற்கொண்டு வந்த ஒருவரும், கடவுச் சீட்டு காரியாலய முகவரும் உள்ளடங்குவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்தநிலையில் கைதுசெய்யப்பட்ட மூவரையும் தடுத்துவைத்து விசாரிக்கும்படி பெரம்பலூர் பொலிஸ் உயர் அதிகாரி, குன்னம் பொலிஸாருக்குப் பணிப்புரை விடுத்துள்ளார்.

## வருடாந்தப் பொதுக்கூட்டம்

பகிரங்கசேவை ஓய்வூதியர் நம்பிக்கை நிதிய யாழ். பிரதேச சங்கத்தின் 10 ஆவது வருடாந்தப் பொதுக்கூட்டம் எதிர்வரும் சனிக்கிழமை முற்பகல் 9.30 மணிக்கு யாழ் புனித சாள்ஸ் மகாவித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது. இந்நிகழ்விற்கு பிரதம விருந்தினராக திருமதி சுகுணரதி தெய்வேந்திரமும், சிறப்பு விருந்தினராக யாழ். பிரதேச செயலக கணக்காளர் வே. வேல்நிதியும் கலந்து கொள்ளவுள்ளனர். (பா)

## கல்விக் கருத்தரங்கு

யாழ். கல்வி வலயத்தினால் கோப்பாய் லயன்ஸ் கிளப் அனுசரணையுடன் நடாத்தும் மேற்படி கருத்தரங்கு இன்றும் நாளையும் காலை 8.00 மணி தொடக்கம் மாலை 4.00 மணிவரை கோப்பாய் கோட்ட மாணவர்களுக்கு யாழ்.கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரி மண்டபத்தில் இடம் பெறும் என யாழ். வலயக் கல்விப்பணிப்பாளர் திருமதி அ. வேதநாயகம் அவர்கள் அறிவித்துள்ளார்.

## கலட்டி கற்பக விநாயகர் ஆலய வீதி திறப்பு

(யாழ்ப்பாணம்)

மாநகர ஆட்சி தொடங்கிய காலத்தில் இருந்து இன்று வரை பல முதல்வர்கள் , ஆணையாளர்கள் பதவியில் இருந்த போதிலும் இவ்வீதியின் புனரமைப்பு பற்றி எவருமே நடவடிக்கை எடுக் காதிருந்த நேரத்தில், எமது குறையைக் கேட்டறிந்த மாநகர முதல்வர் திருமதி யோகேஸ்வரி பற்குணராசா அவர்கள் உடன் நடவடிக்கை எடுத்தமை மிகவும் பாராட்டத்தக்கது


கலட்டி கற்பக வினாயகர் ஆலய வீதி திறப்பு விழா நேற்று முன்தினம் மாலை இடம் பெற்றது. ஏறத்தாழ 60 வருடங்களுக்குப்பின் இந்த வீதி மாநகர முதல்வர் திருமதி யோகேஸ்வரி பற்குணராசா அவர்களது அயராத உழைப்பின் பயனாக



புனரமைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. இதனால் பொதுமக்கள் தமது போக்குவரத்தை மிக விரைவாகவும் தாமதம் இன்றியும் மேற்கொள்ளக் கூடியதாக இருக்கிறது என யாழ் பல்கலைக்கழக புவியியல்துறைப் பேராசிரியர் திரு.இராயேஸ்வரன் அவர்கள் கூறினார். அவர் மேலும் கூறியதாவது, மாநகர ஆட்சி தொடங்கிய காலத்தில் இருந்து இன்று வரை பல முதல்வர்கள் , ஆணையாளர்கள் பதவியில் இருந்த போதிலும், இவ்வீதியின் புனரமைப்பு பற்றி எவருமே நடவடிக்கை எடுக்காதிருந்த நேரத்தில், எமது குறையைக் கேட்டறிந்த மாநகர முதல்வர் உடன் நடவடிக்கை எடுத்தமை மிகவும் பாராட்டத்தக்கது என்றும், இனிமேல் எமது வாக்குகளை அளிக்கும் போது ஒருமுறை நிதானமாகச் சிந்தித்து செயற்பட வேண்டும் எனவும் அப்பகுதி மக்களைக் கேட்டுக்கொண்டார்.

இந்நிகழ்வில் மாநகர சபை பிரதி முதல்வர், மாநகர சபை உறுப்பினர்கள், முதல்வரின் செயலாளர், மாநகர சபை உத்தியோகத்தர்கள் உட்பட பெருமளவான மக்களும் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது.

## நீர்வேலியில் கோரவிபத்து; ஒருவர் படுகாயமடைந்தார்



(யாழ்ப்பாணம்)

யாழ். பருத்தித்துறை வீதியில் நீர்வேலிப் பகுதியில் கூலர் வாகனமொன்று ஐஸ்பழ வியாபாரி ஒருவரின் மோட்டார்சைக்கிள் மீதும், ஹையஸ் வாகனம் ஒன்றின் மீதும் மோதி விபத்துக்குள்ளாகியதில் ஐஸ்பழ வியாபாரி படுகாயமடைந்து யாழ். போதனாவைத்திய சாலையில் ஆபத்தான நிலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதுடன், அவரது மோட்டார் சைக்கிள் மற்றும் ஹையஸ்வாகனமும் கடுமையாக சேதமடைந்தன. நேற்றுப்பிற்பகல் 1.45 மணியளவில் நடைபெற்ற இக்கோரவிபத்தில் நீர்வேலி தெற்கு நீர்வேலியைச் சேர்ந்த 29 வயதுடைய இராசலிங்கம் தவசீலன் (உதயன்) என்பவரே படுகாயமடைந்துள்ளார். தலையிலும் கழுத்திலும் படுகாயமடைந்த இவர் உடனடியாக கோப்பாய் அரசினர் வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லப்பட்டு அங்கிருந்து யாழ். போதனாவைத்தியசாலைக்கு எடுத்துச் செல்லப்பட்டு அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இச்சம்பவம் பற்றி தெரியவருவதாவது, குறித்த நபர் யாழ். பருத்தித்துறை வீதியூடாக நீர்வேலி நோக்கிப் பயணித்துக்கொண்டிருக்கையில், அவருக்குப் பின்புறமாக வந்த கூலர் வாகனம் அவரது மோட்டார் சைக்கிளை அடித்துத் தள்ளிக்கொண்டு சுமார் 25 மீற்றர் தூரம் வரை சென்று விட்டது. இதன்பின்னர் கூலர் வாகன சாரதி வாகனத்தை திருப்பி எடுக்க முயற்சித்த போது எதிரே வந்த ஹையஸ்வாகனம் மீது மோதியது. உடனடியாகவே ஹையஸ் வாகனம் அருகில் இருந்த தோட்டக்காணிக்குள் தூக்கி வீசப்பட்டது. நிலைமை கட்டுப்பாட்டை மீறியதை உணர்ந்த கூலர் வாகன சாரதி வாகனத்தை நிறுத்திவிட்டு தப்பியோடும் முயற்சியில் ஈடுபட்டார். உடனடியாக அப்பகுதியில் திரண்ட பொது மக்கள் அவரை மடக்கிப்பிடித்து பொலிஸாரிடம் ஒப்படைத்தனர். இச்சாரதி பெரும் பான்மை இனத்தைச்சேர்ந்தவர் எனவும், அவரிடம் சாரதி அனுமதிப்பத்திரம் இருந்திருக்கவில்லை எனவும் அப்பகுதி மக்கள் தெரிவித்தனர்.

எனினும் சம்பவ இடத்தில் பொலிஸார் நிலைமையைக் கட்டுப்படுத்தியதுடன், விசாரணைகளையும் மேற்கொண்டனர்.

மேலும் இவ்விபத்தில் சம்பந்தப்பட்ட ஹையஸ வாகனம், கூலர் வாகனம், மோட்டார் சைக்கிள் என்பனவற்றை பொலிஸார் அங்கிருந்து எடுத்துச் சென்றுள்ளதாகவும் தெரியவருகின்றது. (மி,பா)

## சமாந்தரப்பயணம்; யாழில் பலருக்கு அபராதம்

(யாழ்ப்பாணம்)

யாழ். நகரப்பகுதியில் சைக்கிள்களில் சமாந்தரமாகப் பயணம் செய்த பதினைந்து பேரைப் நேற்று யாழ்ப்பாணப் பொலிஸார் கைது செய்தனர்.

கைது செய்யப்பட்ட 15 பேரும் யாழ்ப்பாண நீதிவான் நீதிமன்றத்தில் ஆஜர் படுத்தப்பட்டனர். வழக்கை விசாரித்த யாழ்ப்பாண நீதிவான் நீதிமன்ற நீதிபதி அ. ஆனந்தராசா ஒவ்வொருவருக்கும் 500 ரூபாவீதம் அபராதம் விதித்து தீர்ப்பளித்தார். (மி)

வயல்களுக்குத் தீமை களைகள். சமூகத்திற்கு தீமைகள் ஆசைகள். ஆதலால் ஆசைகளில்லாதவர்களுக்குச் செய்யும் உதவி பெரும் பயனை ஏற்படுத்தும்.

- புத்தர் -

தினப்பதிப்பு
தினமுரசு
THINAMURASU
இல:373, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி : 0212221811
thinamurasu@live.com
thinamurasupaper@hotmail.com

## முயற்சி பலிக்கட்டும்

நீண்டகாலமாகத் தொடரும் இந்திய - இலங்கை மீனவர்களின் பிரச்சினைக்கு சுமுகமான தீர்வு ஒன்று எட்டப்படுவதற்கான நம்பிக்கை ஒளிக்கீற்று தென்படுவதைக் காணக்கூடியதாக உள்ளது.

பிரச்சினைகள் எதுவாக இருந்தாலும் சம்பந்தப்பட்ட தரப்புகள் இதயசுத்தியுடன் புரிந்துணர்வோடு பேச்சுக்களை நடத்துகையில் சுமுகமான தீர்வு ஒன்றைக் காணமுடியும்.

இந்திய - இலங்கை அரசுகளால் நிர்ணயம் செய்யப்பட்ட கடல் எல்லைப் பிரதேசத்தைத் தாண்டி இந்திய மீனவர்கள் வடபகுதி மீனவர்களின் கடல் வளத்தைச் சுரண்டிச் செல்லும்போது பிரச்சினைகள் ஏற்படுவது வழக்கம்.

அத்துமீறி நுழையும் இந்திய மீனவர்கள் றோலர்களைப் பயன்படுத்தி மீன்பிடிப்பதனால் வடபகுதி மீனவர்கள் தமது தொழில் உபகரணங்களை இழத்தல் உட்பட பல பிரச்சினைகளை எதிர்நோக்கி வந்தனர்; வருகின்றனர்.

இவற்றுக்கெல்லாம் முற்றுப்புள்ளி வைக்க வேண்டிய அவசிய தேவை வடபகுதி மீனவர்களுக்கு ஏற்பட்டிருந்தது.

இதன் முதற்கட்டமாக வடபகுதி மீனவ சங்கங்கள் இந்தியத் தூதுவரைச் சந்தித்து தமது பிரச்சினைகளை எடுத்துக்கூறியிருந்ததுடன், அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவையும் சந்தித்து தங்கள் கோரிக்கைகளை முன்வைத்ததைத் தொடர்ந்து, புதுடில்லியில் உயர்மட்ட மாநாடு ஒன்று நடத்துவதற்கான ஏற்பாடுகளும் செய்யப்பட்டுள்ளதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன.

இம் மீனவர்களின் பிரச்சினை தேசிய மட்டத்திற்குக் கொண்டுவரப்பட்டுள்ளமையும், 28 ஆம் திகதி உயர்மட்ட மாநாடு நடத்தப்படவிருப்பதும் வரவேற்கத்தக்க விடயம்.

இந்த உயர்மட்ட மாநாடு நடைபெறுவதற்கு முன், வடபகுதி மீனவர்களின் ஒட்டுமொத்தமான பிரச்சினைகளை, அவர்களது மீனவ சங்கப் பிரதிநிதிகளுடன் கலந்துரையாடி தீர்க்கமான முடிவுகளை மேற்கொள்வதற்கு அமைச்சர் நடவடிக்கை எடுத்திருப்பதாகவும் தெரிகிறது.

அவரது இந்த நடவடிக்கை வடபகுதி மீனவர்களின் பிரச்சினையில் எவ்வளவு தூரம் அக்கறை கொண்டுள்ளார் என்பதையும் எடுத்துக்காட்டுவதாக உள்ளது.

இடப்பெயர்வுகளினாலும், யுத்தத்தினாலும் வெவ்வேறு வழிவகைகளில் பாதிக்கப்பட்ட இம்மீனவ சமுதாயம், யுத்தம் முடிவுற்ற சமாதான சூழ்நிலையிலும் மேலும், மேலும் பாதிக்கப்படுவது ஏற்றுக்கொள்ளமுடியாததொன்று.

மீனவர்களின் இப்பிரச்சினைக்கு உரிய முறையிலான தீர்வு ஒன்று காணப்படவேண்டுமென்பதும், இரு நாடுகளுக்குமிடையிலான உறவுகள் பேணப்பட வேண்டுமென்பதே எமது விருப்பமாகும்.

எனவே, அண்டைநாடான இந்தியாவுடன் நல்லுறவைப் பேணுவதற்கான ஆக்கபூர்வமான நடவடிக்கைகளை மேற்கொண்டுவரும் அமைச்சரின் முயற்சி வெற்றியளிப்பதுடன், நியாயமான தீர்வையும் காணவேண்டுமென விரும்புகிறோம்.

- ஆசிரியர் -

# வலி. வடக்கில் மீள்குடியேறிய பகுதிகளில் விஷமிகளால் பனை மரங்கள் தறிப்பு

(யாழ்ப்பாணம்)

நீண்ட காலத்திற்குப் பின்பு மக்கள் மீள்குடியமர்த்தப்பட்ட வலி.வடக்குப் பகுதிகளிலிருந்து சில விஷமிகளால் அனுமதியின்றிப் பனை மரங்கள் தறித்தெடுத்துக் கொண்டு செல்லப்படுவதாக வலிகாமம் பனை தென்னை வள கூட்டுறவுச் சங்க கொத்தணி வட்டாரங்கள் கவலை தெரிவித்தன. கீரிமலை, வசந்தபுரம், கூவில், வலித்துண்டல் ஆகிய பகுதிகளிலிருந்தே பெருமளவு பனை மரங்கள் தறித்தெடுக்கப்பட்டு உழவு இயந்திரங்களில் ஏற்றிக்கொண்டு செல்லப்படுவதாக அவ் வட்டாரங்கள் தெரிவித்தன.

சுமார் 250 தொடக்கம் 300 வரையான பனை மரங்கள் இவ்வாறு தறித்தெடுக்கப்பட்டு கொண்டு செல்லப்பட்டுள்ளதாக அவ்வட்டாரங்கள் தெரிவித்தன.

இவ்விடயம் குறித்துப் பொலிஸாருக்குத் தெரியப்படுத்தியும் அவர்களின் நடவடிக்கைகள் கட்டுப்படுத்தப்படவில்லை எனவும் தெரிவிக்கப்படுகிறது.

இவ்வாறு பனை மரங்கள் தறிப்பவர்களிடம் அதற்கான அனுமதி பற்றிக் கேட்குமிடத்து, அவர்கள் அவதூறான வார்த்தைப் பிரயோகங்களில் ஈடுபடுவதாக வலிகாமம் பனை தென்னை வள கூட்டுறவுச் சங்க வட்டாரங்கள் தெரிவித்தன.

இப்பகுதிகளில் யுத்த காலத்தின்போது பெருமளவு பனை மரங்கள் அழிவடைந்துள்ள சூழலில் மேலும் மேலும் எமது பனைமரங்கள் அழிக்கப்பட்டு வருவதாக அவ் வட்டாரங்கள் கவலை வெளியிட்டுள்ளன. (பா)

## யாழ். மாவட்டத்திலுள்ள பாடசாலைகளுக்கு நேற்றுவரை பரீட்சை முடிவுகள் வரவில்லை

(யாழ்ப்பாணம்)

அண்மையில் வெளியாகிய க.பொ.த.சாதாரணதர பரீட்சையின் யாழ். மாவட்ட பாடசாலைகளின் உத்தியோகபூர்வ பரீட்சை முடிவுகள் நேற்று நண்பகல் வரை பாடசாலைகளுக்குக் கிடைக்கப்பெறவில்லை என பாடசாலை வட்டாரங்கள் தெரிவித்தன.

பரீட்சைத் திணைக்களத்தால் தபால்மூலமாக பாடசாலைகளுக்கு அனுப்பி வைக்கப்பட்டிருந்த போதும், இதுவரை பாடசாலைகளுக்கு அவை கிடைக்கவில்லை எனத் தெரிவிக்கப்படுகின்றது.

கடந்த 16 ஆம் திகதி புதன்கிழமை அன்று இப்பரீட்சை முடிவுகள் பரீட்சைத் திணைக்களத்தால் கொழும்பில் உத்தியோகபூர்வமாக அதன் இணையத் தளத்தில் வெளியாகியிருந்தமை தெரிந்ததே.

இதன் காரணமாக இப்பரீட்சைக்குத் தோற்றிய பாடசாலை மற்றும் தனியார் பரீட்சார்த்திகள் இணையத்தள நிறுவனங்களை நாடித் தமது பரீட்சை முடிவுகளை அறிய முண்டியடித்தமை அவதானிக்க முடிந்தது. (பா)

## விசேட பொதுக்கூட்டம்

(ஆனைக்கோட்டை)

மானிப்பாய் ப.நோ.கூட்டுறவுச் சங்கத்தின் விசேட பொதுச்சபைக் கூட்டம் எதிர்வரும் 26 ஆம் திகதி சனிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு சங்க மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

சங்கத்தலைவர் ஆ.அப்புத்துரை தலைமையில் நடைபெறும் இக்கூட்டத்தில் காணிக் கட்டடத்தை ஈடு வைத்து வங்கியில் எடுத்த கடன் 3 மாதங்கள் தவணை தப்பியுள்ளதால் அதனை மீட்பது தொடர்பாகவும் சங்கத்தில் இருந்து இடைவிலகிய பணியாளர்களின் பிணை, பணிக்கொடை, வாழ்க்கைத்தரளுபடி என்பன தொடர்பாகவும் ஆராயப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (104)

# வன்னிப் பாடசாலை மாணவர்களை ஏற்ற மறுக்கும் அரச, தனியார் பேருந்துகள்

## பாடசாலை சேவையை ஏற்படுத்தித் தருமாறு கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

ஏ-9 வீதியால் காலைவேளை பயணிக்கும் தனியார், அரச பேருந்துகள் வன்னிப் பாடசாலை மாணவர்களை ஏற்றுவதில்லை எனவும், இதனால் மாணவர்களுடைய கல்வி பாதிக்கப்படுவதாகப் பாடசாலை அதிபர்களும், பெற்றோர்களும் கவலை தெரிவிக்கின்றனர்.

ஏ-9 வீதியூடாக யாழ் நகரிலிருந்து வவுனியா, திருகோணமலை, மட்டக்களப்பு போன்ற தூர இடங்கக்குப் பயணிக்கும் பேருந்துகள் எவையும் பளை, இயக்கச்சி, பரந்தன், மாங்குளம், புளியங்குளம் முதலான இடங்களில் பாடசாலை மாணவர்களுக்காக நிறுத்தப்படுதில்லை எனவும், இதனால் பாடசாலை மாணவர்கள் உரிய நேரத்திற்குப் பாடசாலைக்குச் செல்லமுடியாத நிலையே காணப்படுவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இது தொடர்பில் பாடசாலை அதிபர்கள் இலங்கை போக்குவரத்துச் சபையுடன் தொடர்பு கொண்டு அவர்கள் கவனத்திற்குக் கொண்டுவந்த பின்னரும் இந்நிலையே காணப்படுவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை, பளையிலிருந்து வன்னி மாணவர்களுக்கெனப் பாடசாலைச் சேவை ஒன்றை ஏற்படுத்துமாறு யாழ்ப்பாணம் இ.போ.ச. சாலையினரிடம் கோரிக்கை விடுத்ததாகவும், அதற்கும் எவ்வித நடவடிக்கையும் இதுவரை எடுக்கப்படவில்லை எனவும் அதிபர்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

எனவே, மாணவர்களின் கல்வியைக் கருத்திற்கொண்டு சம்பந்தப்பட்ட அதிகாரிகள் இவ்விடயம் தொடாபில் கூடிய கவனம் எடுக்கவேண்டும் என அவர்கள் மீண்டும் கோரிக்கை விடுக்கின்றனர். (06)

## எதிர்வரும் 27 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை பாலைதீவு அந்தோனியார் ஆலய உற்சவம்

(கொக்குவில்)

பிரசித்தி வாய்ந்த புனித யாத்திரைத் தலமான பாலைதீவு அந்தோனியார் தேவாலய வருடாந்த திருநாள் எதிர்வரும் 27 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை நடைபெறுமெனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த காலங்களில் கச்சதீவு புனித அந்தோனியார் ஆலயத் திருநாளுக்கு முதல் வாரமே பாலைதீவு அந்தோனியார் ஆலயக் கொண்டாட்டங்கள் நடைபெற்று வந்தன.

அதன்படி 25 ஆம் திகதி வெள்ளிக்கிழமை கொடியேற்றமும், 26 ஆம் திகதி மாலை நற்கருணைத் திருவிழாவும், 27 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 7 மணிக்கு திருநாள் பாடல் கூட்டுத்திருப்பலியும் நடைபெற்று தொடர்ந்து திருச்சொரூபப் பவனி நடைபெறும்.

பவனியின் நிறைவில் சொரூப ஆசீருடன் திருநாள் கொண்டாட்டங்கள் நிறைவெய்தும்.

குடாநாட்டிலிருந்து பாலைதீவுக்குச் செல்வோர் குருநகர் இறங்குதுறை ஊடாகச் செல்வதற்கான ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன.

வன்னிப் பகுதியால் பாலாவி, பள்ளிக்குடா, நாச்சிக்குடாத் துறைகளால் யாத்திரிகர்கள் பாலைதீவுக்கு வருகை தருவர். 25 ஆம் திகதியிலிருந்தே பாலைதீவு செல்ல அனுமதிக்கப்படுவரென்றும் தெரிவிக்கப்படுகிறது. (68)

## கமநல சேவை கேந்திர நிலையங்களில் உத்தியோகத்தர்கள் பற்றாக்குறை

(கிளிநொச்சி)

கிளிநொச்சி மாவட்டத்தில் இயங்குகின்ற கமநல சேவைகள் கேந்திர நிலையங்களில் பெரும்பாக உத்தியோகத்தர் பற்றாக்குறை நிலவுவதாகவும் இதனால் விவசாய நடவடிக்கைகளை பெற்றுக்கொள்வதில் சிரமங்களை எதிர்நோக்கவேண்டி உள்ளதாகவும் விவசாயிகள் தெரிவிக்கின்றனர்.

8 கமநல சேவை கேந்திர நிலையங்கள் இயங்குகின்றபோதிலும் இந்நிலையங்களில் 2 பெரும்பாக உத்தியோகத்தர்களே கடமையாற்றுகின்றனர். இதனால் விவசாயிகளின் பலதேவைகளை விரைவாக முன்னெடுப்பதற்கு சிரமமாக உள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

மேலும் அவ்வப் பிரதேசத்திலுள்ள விவசாயிகள் அவ்வக் கமநல சேவை நிலையங்களினூடாக விவசாய தேவைகளை இலகுவாகப் பெற்றுக்கொள்ள முடியாத நிலைகாணப்படுவதாகவும், இவ்வேலைகளை இலகுவாக்க 6 பெரும்பாக உத்தியோகத்தர்கள் தேவை எனவும் தெரிவிக்கப்படுகின்றது. (28)

# தேசிய நுளம்புக்கட்டுப்பாட்டு வாரம் 23 முதல் 27 வரை அனுஷ்டிப்பு

## சுகாதார சேவைகள் பணிப்பாளர் கேதீஸ்வரன்

(யாழ்ப்பாணம்)

தென்மேற்குப் பருவமழை ஆரம்பமாகியிருப்பதால் டெங்கு நோய் பரவுவதை தடுக்கும் நோக்குடன் ஜனாதிபதி செயலணிக்குழு நாளை முதல் 29 ஆம் திகதி வரை தேசிய நுளம்பு கட்டுப்பாட்டு வாரமாகப் பிரகடனப் படுத்தியிருப்பதாக பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஆ. கேதீஸவரன் அனுப்பிவைத்துள்ள செய்தித்தொகுப்பில் அறிவித்துள்ளார்.

இது சம்பந்தமாக அச் செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:


தேசிய நுளம்பு கட்டுப்பாட்டு வாரத்தில் நிறுவனங்களிலும், பொது இடங்களிலும் வீடுகளிலும் நுளம்பு கட்டப்பாட்டு சுத்திகரிப்பு பணிகள் இடம்பெற வேண்டும். இவ் வாரத்தில் மேற்கொள்ளப்படும் பணிகளைக் கண காணிக்கும் நோக்குடன் கால அட்டவணை ஒன்று வெளியிடப்பட்டுள்ளது. அதன்பிரகாரம்:

நாளை 23.03.2011 (புதன் கிழமை) அரச, அரச சார்பற்ற நிறுவனங்கள், வர்த்தக நிலையங்கள் 24.03.2011 (வியாழக் கிழமை) நுளம்புகள் பெருகக்கூடிய உயர் வாய்ப்புள்ள இடங்கள் (High risk areas) பஸ் சாலைகள், ரயர்க் கடைகள், வாகன திருத்துமிடங்கள், பழைய இரும்பு சேகரிக்கப் படுமிடங்கள் 25.03.2011 (வெள்ளிக்கிழமை) அரசாங்க பாடசாலைகள், தனி யார் பாடசாலைகள், தனியார் கல்வி நிலையங்கள், உயர் கல்வி நிலையங்கள் 26.03.2011 (சனிக்கிழமை) வீடுகள் 27.03.2011 (ஞாயிற்றுக்கிழமை)- பொது இடங்கள், வணக்கத் தலங்கள், சந்தைகள், மயானங்கள் 28.03.2011 (திங்கட்கிழமை) பராமரிப்பற்ற காணிகள், பராமரிப்பற்ற வீடுகள், புகையிரதப் பாதைகள், வீதிக்கரையோரங்கள். 29.03.2011 (செவ்வாய்கிழமை) முன்பள்ளிகள், மீதியான மேலே குறிப்பிடப்படாத இடங்கள் நிறுவனங்களின் சுத்திகரிப்பு பணிகட்கு சம்பந்தப்பட்ட நிறுவனத்தலைவர் பொறுப்பாக இருப்பார்.

தனியார் நிறுவனங் கள், வர்த்தக நிலையங்களின் சுத்திகரிப்பு பணிகட்கு உரிமையாளர் பொறுப்பாக இருப்பார்.அரச / தனியார் பாடசாலைகளில் அதிபரும் இதற்கென நியமிக்கப்பட்ட பொறுப்பு ஆசிரியரும் இப் பணிகளை ஒருங்கிணைக்க வேண்டும். 23.03.2011 இலிருந்தே ஆரம்பிக்கலாம். 26.03.2011 ற்கு முன் சகல வீடுகளும் துப்பரவு செய்யப்பட்டிருத்தல் வேண்டும் வீடுகளின் சுத்திகரிப்பு பணியை மேற்பார்வை செய்ய கிராம சேவையாளர், சமுர்த்தி உத்தியோகத்தர், குடும்பநல உத்தியோகத்தர், சுகாதாரத் தொண்டர்கள், பாதுகாப்பு படையினர் அடங்கிய குழு அமைக்கப் படும். இதனை பிரதேசத்திற்குரிய பொது சுகாதார பரிசோதகர் ஒருங்கிணைப்பார். பொது இடங்களான வணக்கத்தலங்கள், மயானங்கள் என்பனவற்றை கிராம மட்ட அமைப்புக்களான கிராம அபிவிருத்திச் சங்கங்கள், மாதர் அபிவிருத்திச் சங்கங்கள், சன சமூக நிலையங்கள், விளையாட்டு கழகங்களின் உதவியுடன் சிர மதான முறையில் துப்பரவு செய்ய வேண்டும்.

இதனை கிராம மட்ட டெங்கு தடுப்பு செயலணிக் குழு ஒழுங்கு செய்ய வேண்டும். முன்பள்ளிகள் அங்கு பயிலும் பிள்ளைகளின் பெற்றோரால் சிரமதானமுறையில் துப் பரவு செய்யப்பட வேண்டும் மேறபடி சுத்திகரிப்பு பணிகளை பிரதேச செயலக பிரிவு மட்டத்தில் பிரதேச செயலாளர், உள்ளூராட்சி மன்ற செயலாளர், சுகாதார வைத்திய அதிகாரி, வலயக் கல்விப்பணிப்பாளர் (பாடசாலை கட்கு) ஆகியோரின் பிரதிநிதிகள் அடங்கிய குழு மேற்பார்வை செய்யும்.

மேலே குறிபபிட்ட திகதிகளில் சுத்திகரிப்பு பணிகளை அன்றைய தினங்களில் ஏற்பாடு செய்வதில் ஏதும் சிரமம் இருப்பின் அத்திகதிக்கு முன்னதாக ஏற்பாடு செய்யலாம். குறிக்கப்பட்ட தினத்தில் நிறுவனம் துப்பரவாக இருக்க வேண டும். இப்பணிகளுக்கு ஒத்து ழைபபு வழங்காது தமது நிறுவனத்தில் / வீட்டில் நுளம்பு பெருகக்கூடிய இடங்களை வைத்திருப்போருக்கு எதிராக சட்ட நடவடிக்கை முன்னெடுக்கப்பட வேண்டும்.



வடமாகாணத்தில் சிறந்த விவசாயப் பாடசாலையாகத் தெரிவு செய்யப்பட்ட பண்டத்தரிப்பு இந்துக் கல்லூரிக்கு கல்வித் திணைக்களம் இரண்டு சில்லு உழவு இயந்திரம் ஒன்றை வழங்குவதைக் காணலாம்.

# தேர்தல் காலங்களில் அரசுமீது ஐ.தே.க, ஜே.வி.பி சுமத்திய குற்றச்சாட்டுக்களை மக்கள் நிராகரித்தனர்

ஐ.ம.சு.மு அமோக வெற்றி கோட்டைகளை இழந்து ஐ.தே.க. படுதோல்வி, 9 சபைகளில் தப்பிப்பிழைத்து அனைத்தையும் இழந்து மண்கௌவியது ஜே.வி.பி அரசியல் எதிர்காலம் சூனியம்? 234 உள்ளூராட்சி சபைகளுக்கு நடத்தப்பட்ட தேர்தலில் 205 சபைகளைக் கைப்பற்றி ஐ.ம.சு. முன்னணி அமோக வெற்றியீட்டியுள்ளது ஐ.தே.க. தனது பல கோடடைகளை இழந்து படுதோல்வியடைந்ததோடு, அதனால் 9 சபைகளை மட்டுமே வெல்ல முடிந்தது. ஜே.வி.பி தனக்கிருந்த ஒரேயொரு உள்ளூராட்சிச் சபையையும் இழந்து அரசியலிலிருந்தே தூக்கிவீசப்படும் நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளது.

உள்ளூராட்சி சபைத் தேர்தல்கள் நேற்று முன்தினம் வடக்கு, கிழக்கு உட்பட நாடு முழுவதும் அமைதியாக நடைபெற்றது. நேற்றுக்காலை 10 மணியளவில சகல தேர்தல் முடிவுகளும வெளியிடப்பட்டன. இத்தேர்தலில் ஐ.தே.க. தனது கட்டுப்பாட்டிலிருந்த 18 உள்ளூராட்சி சபைகளையும் கோட்டைவிட நேரிட்டதோடு, முஸ்லிம் காங்கிரசும் ஓரளவு பின்னடைவையே எதிர் கொண்டது. வடக்கு,கிழக்கு தமிழ் பிரதேசங்களை மையமாக வைத்துத் தேர்தலில் குதித்த தமிழரசுக் கட்சி 12 உள்ளூராட்சி சபைகளைக் கைப்பற்றியுள்ளது.

முஸ்லிம் காங்கிரஸினால் நான்கு சபைகளை மட்டுமே வெல்லமுடிந்தபோதும் வடக்கு, கிழக்கில் முதற்தடவையாக போட்டியிட்டு பல சபைகளில் வென்றது. தேசிய காங்கிரஸ் தனது கட்டுப்பாட்டிலிருந்த இரு சபைகளையும் தக்க வைத்துக் கொண்டதோடு, மலையக மக்கள் முன்னணி நுவரெலியா பிரதேச சபையையும், சுயேட்சைக் குழு - 1 பல்லேபொல பிரதேசசபையையும் கைப்பற்றியது விசேட அம்சங்களாகும்.

இந்தத் தேர்தலில் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி 33 இலட்சத்து 84 ஆயிரம் வாக்குகளைப் பெற்றது. இது அளிக்கப்பட்ட மொத்த வாக்குகளில் 55.65 வீதமாகும் ஐ.தே.க 20 லட்சத்து 32 ஆயிரம் வாக்குகளையும் தமிழரசுக் கட்சி 70 ஆயிரம் வாக்குகளையும் பெற்றன. அதிகமாக உள்ளூராட்சி சபைகளை ஐ.ம.சு.மு பாரிய வாக்குவித்தியாசத்தில் கைப் பற்றியிருந்தது.

ஆட்சி மாற்றத்திற்கு முதற்படியாக இந்தத் தேர்தலில் வெறறிபெறுவதாக வீரவசனம் பேசிய ஐ.தே.க. வினால் பண்டாரவளை மாநகரசபை, குளியாப்பிட்டி நகரசபை, கம்பொல நகரசபை, கடுகண்ணாவ நகரசபை, களுத துறை நகரசபை அடங்கலான ஒன்பது உள்ளூராட்சிச் சபைகளை மட்டுமே தக்கவைக்க முடிந்தது. ஐ.மு.சு.மு.ஐ விட 725 வாக்கு வித்தியாசத்தில் ஐ.தே.க. கம்பொல நகரசபையை கைநழுவவிட்டது. பண்டாரவளைமாநகர சபையும் 154 வாக்குகளினாலே ஐ.ம.சு.மு. வுக்குகையாறியது. 20 வருடங்களின் பின்னர் கதிர்காமம் பிரதேச சபையை ஐ.ம.சு.மு. விடம் ஐ.தே.க. பறிகொடுத்தது முக்கிய விடயமாகும்.

வத்தளை மாபோல நகர சபை, வத்தளை பிரதேசசபை, பேலியாகொட நகரசபை, பாணந்துறை நகரசபை, ஹொரண பிரதேசசபை அடங்கலான 18 உள்ளூராட்சிச் சபைகளை ஐ.தே.க. பரிதாபமாக இழந்தது.

முஸ்லிம் காங்கிரசின் கட்டுப்பாட்டிலிருந்த காத்தான்குடி நகர சபையும், ஏறாவூர் நகர சபையும் இம்முறை ஐ.ம.சு.மு வின் கட்டுப்பாட்டின் கீழ் வந்துள்ளன. கோரளைப்பற்று மேற்கு பிரதேசசபையையும் ஐ.ம.சு.மு.யே. வென்றது. இதன் மூலம் மட்டக்களப்பு மாவட்டத்தில் தேர்தல் நடந்த 3 உள்ளூராட்சி சபைகளையும் ஐ.ம.சு.மு கைப்பற்றியது. 7 ஆயிரம் மேலதிக வாக்குகளால் கோரளைப்பற்று மேற்கு பிரதேச சபையை ஐ.ம.சு.மு வென்றது.

அமைச்சர் அதாவுல்லா தலைமையிலான தேசிய காங்கிரஸ் தனது கட்டுப்பாட்டிலிருந்த அக்கரைப்பற்று மாநகர சபையையும், பிரதேசசபையையும் இம்முறை தக்கவைத்துக்கொண்டன. தேசிய காங்கிரசுக்குப் போட்டியாக களமிறங்கிய முஸ்லிம் காங்கிரசினால் தலா ஒவ்வொரு ஆசனங்களை மட்டுமே பெறமுடிந்தது.

வடக்கு, கிழக்கு மாகாணங்களில் போட்டியிட்ட தமிழரசுக் கட்சி 12 சபைகளைக் கைப்பற்றியது. வவுனியாவில் தேர்தல் நடைபெற்ற 5 உள்ளூராட்சிச் சபைகளில் நான்கையும், மன்னாரில் 5 உள்ளூராட்சி சபைகளுக்கான தேர்தலில் 4 சபைகளையும் தமிழரசுக்கட்சியே கைப்பற்றியது. திருகோணமலை மாவட்டத்தில் 9 உள்ளூராட்சி சபைகளில் திருமலை நகர சபையையும் வெருகல் பிரதேச சபையை மட்டுமே தமிழரசுக் கட்சியால் வெல்ல முடிந்தது. ஏனைய ஏழு சபைகளும் ஐ.ம.சு.மு. வினால் வெற்றியீட்டப்பட்டன.

மன்னார் மாவட்டத்திலுள்ள உள்ளூராட்சி சபைகளில் முசலி பிரதேச சபையை மட்டுமே ஐ.ம.சு.மு வினால் கைப்பற்ற முடிந்ததோடு, தமிழரசுக் கட்சி ஏனைய சபைகளைத் தனதாக்கிக் கொண்ட்து. முல்லைத்தீவு மாவட்டத்தில் மாந்தை தெற்குப் பிரதேசசபைக்கு மட்டுமே தேர்தல் நடைபெற்றது. பிரஜைகள் முன்னணி இந்த பிரதேச சபையை கைப்பற்றும் எனப் பரவலாக எதிர்பார்க்கப்பட்ட போதும் அதனால் ஒரு ஆசனத்தைக்கூட பெற முடியவில்லை. பிரஜைகள் முன்னணி 56 வாக்குகளை மட்டுமே பெற்றதோடு ஐ.தே.க. மூன்று வாக்குகளைப் பெற்றது.

2006 ஆம் ஆண்டு நடைபெற்ற உள்ளூராட்சி சபைத் தேர்தலில் பெரும்பாலான சபைகளில் குறைந்த பட்சம் ஒரு ஆசனத்தையாவது பெற்ற ஜே.வி.பி. இம்முறை வெறும் கையுடனேயே திரும்ப நேரிட்டது. சில உள்ளூராட்சிச் சபைகளில் ஜே.வி.பி யை ஓரம்கட்டிவிட்டு சுயேட்சைக் குழுக்கள் ஆசனம் ஒன்றைக் கைப்பற்றின. வெலிகம நகரசபை, கிரிந்த புகுல் வெல்ல பிரதேசசபை, நுவரெலியா நகரசபை, திருகோண் மலை பிரதேசசபை, கம்பளை நகரசபை, கெப்பற்றிக்கொல்லாவ நகரசபை, கடுகண்ணாவ நகரசபை, மாத்தறை பிரதேச சபை பிபில பிரதேச சபை, ஹொறண நகரசபை, களுத்துறை நகரசபை, ரம்போவ பிரதேச சபை, சீதாவாக்கை நகரசபை மீகஹகிவுல பிரதேசசபை, கொடகெல பிரதேசசபை, ரத்தோட்டை பிரதேசசபை, நாமல் ஓயா பிரதேசசபை, தும்பன பிரதேசசபை வெலிகம பிரதேச சபை, பண்ணால பிரதேசசபை, என ஜே.பி.வி.யின் ஒரு ஆசனமும் பறிபோன உள்ளூராட்சி சபைகள் எராளம். சில இடங்களில் இரு உறுப்பினர் தொகை ஒன்றாகக் குறைந்துள்ளது. தமிழ் மக்கள், விடுதலைப் புலிகள், தேசப்பற்றுள்ள தேசிய இயக்கம், லிபரல் கட்சிபோன்ற சிறு கட்சிகளும் சில சபைகளில் ஒரு ஆசனம் வீதம் கைப்பற்றின.

இறுதி முடிவின்படி ஐ.ம.சு.மு 1813 உறுப்பினர்களையும், ஐ.தே.க 884 உறுப்பினர் களையும், ஜேவிபி. 57 உறுப்பினர்களையும் பெற்றதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

(நன்றி இணையம்)

# யாழ்ப்பாண ஊடகவியலாளர்களுக்கு ஆங்கில மொழிப்புலமை அவசியம்

## பேராசிரியர் பாலசுந்தரம்பிள்ளை

(யாழ்.நிருபர்)

யாழ்ப்பாணத்தில் ஊடகத் துறையினருக்கான கேள்வி அதிகரித்து வருகிறது. இந்நிலையில் தேவையான பயிற்சி பெற்ற ஊடகவியலாளர்களை உருவாக்கும் நோக்குடன் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக ஊடக வளங்கள் பயிற்சி மையம் ஊடகவியல் தொடர்பான புலமைசார் பயிற்சிநெறிகளை வழங்கி வருகிறது என்று யாழ். பல்கலைக்கழக முன்னாள் துணைவேந்தரும் வாழ்நாள் பேராசிரியருமான பொ.பாலசுந்தரம்பிள்ளை குறிப்பிட்டார்.

ஊடக வளங்கள் பயிற்சி மைய விரிவுரை மண்டபத்தில் நடைபெற்ற இந்நிகழ்வில் அவர் தொடர்ந்து உரையாற்றுகையில் -

எதிர்காலத்தில் ஊடகத் துறையில் நுழைபவர்கள் சர்வதேச தொடர்பாடல் திறன்களை வளர்த்துக்கொள்ள வேண்டும். பத்திரிகைகளில் கடமையாற்றும் பத்தி எழுத்தாளர்கள் தமக்குத் தேவையான தகவல்கள் எல்லாவற்றையும் சரியான புள்ளிவிபரங்களோடு மடிக் கணனியில் பதிவுசெய்து வைத்திருத்தல் வேண்டும். ஈமெயில், இன்ரநெற் தொடர்பான பயிற்சியும் புலமையும் பெற்றிருக்கவேண்டும்.


முற்காலத்தில் சிங்களம் படித்தால் வேலை வாய்ப்புப் பெறலாம் என்று சொன்னார்கள். இன்று சர்வதேச தொடர்பு மொழியான ஆங்கிலத்தில் புலமை இல்லாதவர்கள் ஊடகத்துறையில் திறமையாகப் பணியாற்ற முடியாத நிலை தோன்றியுள்ளது.

இன்று ஊடகக்கல்வி பாடசாலைகளில் தரம் 10,11 மாணவர்களுக்குத் தெரிவுப் பாடங்களில் ஒன்றாகக் கற்பிக்கப்படுகிறது.

யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தில் பட்டப்படிப்புக்காக ஊடகக்கல்வி ஒரு பாடமாகவுள்ளது. ஊடக வளங்கள் பயிற்சி நிலையம் 2004 ஆம் ஆண்டிலிருந்து இதழியல் டிப்ளோமா கற்கை நெறியினை நடத்தி வருகிறது. தற்போது பகல்நேர, பகுதிநேர வகுப்புக்களை நடத்தி வருகிறது.

தமிழர் அரசியலைப் பொறுதத வரை பின்நோக்கிப் பார்த்தால் அது துன்பமாகவே உள்ளது. தமிழ் அரசியல் தலைமைகள் என்ன செய்தார்களோ தெரியாது. நான் அரசியல்வாதி அல்ல. கல்வித் துறைசார்ந்தவன். கல்வித்துறையைச் சரியாக முன்னெடுத்துச் செல்வதே எனது பணியாகும்.

நாவலர் பரம்பரையில் வநதவர்கள் நாங்கள். தமிழ்மொழியை எழுத்துப்பிழையின்றி இலக்கணச் சுத்தியோடு எழுதவேண்டும் எனக் கேட்டுக் கொண்டார். யாழ் பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் நா.சண்முகலிங்கன் தொடக்கவுரை நிகழ்த்தினார். மற்றும் பலர் உரையாற்றினார்கள். (10)






காரைநகர் வலந்தலை கண்ணகை அம்மன் ஆலய பௌர்ணமித் திருவிழாவன்று திருமஞ்சக்கிணறு அமைக்கும் ஆரம்ப நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட ஈ.பி.டி.பி காரைநகர் அமைப்பாளர் வி.கண்ணன் (ரஜனி) ஆலய வீதிக்கு 'கண்ணகை அம்மன் கோயில் வீதி' எனப் பெயர் சூட்டினார்.

# காரைநகரில் ரூபா 15 இலட்சம் செலவில் அலங்கார வளைவு அமைக்க ஏற்பாடு

(யாழ். நிருபர்)

காரைநகர் நுழைவாயிலில் வலந்தலைச் சந்திக்கு அருகாமையில் மண்றோட் முகப்பில் 'காரைநகர் வரவேற்கிறது' என்னும் முகப்பிலான அலங்கார வளைவு அமைக்கப்படவுள்ளது.

சுமார் 15 இலட்சம் ரூபா செலவில் அமைக்கப்படவுள்ள இவ் அலங்கார வளைவில் நடேசர் சிலை அமைக்கப்பட்டு இடப வாகனத்துடன் கூடிய அழகிய சிற்பவேலைப்பாடுகள் செய்யப்படவுள்ளது.

முன்னாள் இந்து கலாசார அமைச்சரும், கொழும்பு மற்றும் யாழ். மாவட்ட முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் அமரர் தியாகராசா மகேஸ்வரனின் ஞாபகார்த்தமாகவே இவ் அலங்கார வளைவு அமைக்கப்படவுள்ளது. (10)

# சுற்றுலா செல்லும் புதிய அதிபர்கள்

(யாழ்ப்பாணம்)

வலிகாமம் வலயத்தில் புதிதாக நியமனம் பெற்ற அதிபர்கள் கண்டிக்கான சுற்றுலாப் பயணம் ஒன்றை மேற்கொண்டுள்ளனர்.

இவர்கள் கண்டிக்குச் சென்று அங்குள்ள பாடசாலை மாணவர்களின் கற்றல் செயற்பாடுகள் மற்றும் அங்குள்ள கற்றல் முறைகள் உள்ளிட்ட விடயங்கள் குறித்து அவதானிக்கவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (17)

## ஆதினியின் இன்றைய பலன்

(22.03.2011 - செவ்வாய்க்கிழமை)

### பஞ்சாங்கக் குறிப்புக்கள்

விகிர்தி பங்குனி 08
இராகுகாலம் 3.17 - 4.47, சுபநேரம் 10.47 - 12.17
திருதியை பி.ப.5.37,
சுவாதி சித்தம் பி.இ.4.34,
காரைக்கால் அம்மையார் குருபூசை.

**இரகுநாதையர் பஞ்சாங்க கணிப்பை அடிப்படையாகக் கொண்டது**

- மேடம்:- காரிய சித்தி, மதிக்கப்படல், நல்லுறவு.
- ரிஷபம்:- அதிக லாபம், தொழில் விருத்தி, நண்பர் உதவி.
- மிதுனம் :- தனவரவு, புகழ்பெருகல், ஆன்மீக விருப்பு.
- கடகம்:- புத்திசாதுரியம், காரிய வெற்றி, இலாபம்.
- சிம்மம்:- தேக நலன் விருத்தி, கொண்டாட்டம், பணவரவு.
- கன்னி :- பெரியோர் ஆசி, பரிசு கிடைத்தல், கலகலப்பு.
- துலாம் :- காரியத்தடை, மனமுறிவு, தர்க்கப்படல்.
- விருச்சிகம்:- முயற்சி பலிதம், அதிகலாபம், தனவரவு.
- தனுசு:- உயர்ந்த நிலை, புரிந்து நடத்தல், காரிய சித்தி.
- மகரம்:- உதவிகள் கிடைத்தல், சுபச் செய்தி, தடைகள் அகலல்.
- கும்பம் :- பெண்களால் உதவி, மேலோர் நட்பு, தனச் சேர்க்கை.
- மீனம்:- அமைதியில் நாட்டம், தெய்வ சிநதனை, உதவிகள் செய்தல்.

# மீள்நியமன வைத்திய அதிகாரி நீண்ட லீவில் வெறிச்சோடியுள்ள வெளிநோயாளர் பிரிவு



(யாழ்ப்பாணம்)

ஆனைக்கோட்டையில் இயங்கும் மானிப்பாய் பிரதேச அரசினர் வைத்தியசாலையின் வெளிநோயாளர் பிரிவு கடந்த இரண்டு மாதங்களாக மாலை வேளையில் மட் டுமே இயங்குவதால், சிகிச்சை பெறுவதற்கு வரும் நோயாளர்கள் பல இன்னல்களை அனுபவித்து வருகின்றனர்.

இவ் வைத்தியசாலையில் மீள் நியமனம் பெற்று பணியாற்றி வந்த வைத்திய அதிகாரி நீண்ட விடுமுறையில் சென்றுள்ளதால், உடுவில் பிரதேச அரசினர் வைத்தியசாலையின் பொறுப்பதிகாரி கடந்த இரண்டு மாதங்க ளாக பிற்பகல் 2 மணி முதல் 4 மணிவரை இரண்டு மணித்தியாலங்கள் மட்டும் நோயாளர்களுக்குச் சிகிச்சையளித்து வருகின்றார்.

இதனால் சனி, ஞாயிற்றுக் கிழமை மற்றும் விடுமுறை நாட்களில் முழுமையாக மூடப்பட்டு வைத்தியசாலை வெறிச்சோடிக் கிடக்கின்றது. ஆனால் பிரசவ விடுதி மட்டும் செயற்பட்டு வருகின்றது.

இவ் வைத்தியசாலையைச் சுற்றியுள்ள பிரதேசத்தில் வறுமைக்கோட்டின் கீழ் வாழும் மக்களே அதிகம் வாழ்கின்றனர். இவர்கள் காலை வேளையில் வைத்தியசாலைக்கு வந்து பெருத்த ஏமாற்றத்துடன் கொதிக்கும் வெய்யிலில் தினம்தினம் திரும்பிச் செல்லும் காட்சியைப் பார்க்க மிகவும் பரிதாபமாக உள்ளது.

இவ் விடயம் சம்பந்தமாக வைத்தியசாலை அபிவிருத்திச் சபையினர் நிரந்தர வைத்தியரொருவரை உடன் நியமனம் செய்யுமாறு கோரி யாழ். சுகாதார சேவைகள் பணிப்பாளரிடம் மகஜரொன்றைக் கொடுத்துள்ளனர்.

இந்த வைத்தியசாலையின் வெளிநோயாளர் பிரிவு காலை வேளையில் வெறிச்சோடிக் கிடப்பதாகவும், அங்கு குழந்தைகளுக்கு வழங்கும் கோண் சோயா மா மூடைகள் அடுக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (104)

# வணிகஜோதி இதழ் வெளியீட்டு விழா

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலய வணிக மாணவ மன்றத்தினரின் வணிகஜோதியின் 23 ஆவது இதழ் வெளியீட்டு விழா நாளை புதன்கிழமை காலை 10 மணிக்கு இடம்பெறவுள்ளது.

மன்றத்தலைவர் கஜேந்திரன் தலைமையில் இடம்பெறும் இவ்விழாவிற்குப் பிரதம விருந்தினராக யாழ்ப்பாணப் பல்கலைக்கழக முகாமைத்துவ கற்கைகள், வணிக பீடத்தின் நிதி முகாமைத்துவத் துறைத் தலைவர் பேராசிரியர் மா.நடராசசுந்தரமும், சிறப்பு விருந்தினராக டி.எவ்.சி.வங்கியின் உதவி முகாமையாளர் க.சுதாகரனும் கலந்து கொள்கினறனர்.

வாழ்த்துரையை அதிபர் வே.ஞானகாந்தனும், இதழ் வெளியீட்டு உரையை யாழ். கல்வி வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர் வி.மாணிக்கமும், அறிமுகவுரையை யாழ். பல்கலைக்கழக முகாமைத்துவ கற்கைகள், வணிகபீட கணக்கியற்துறை சிரேஷட விரைவுரையாளர் கலாநிதி ந.நிமலதாசனும் நிகழ்த்துவர். முதற்பிரதியை பழைய மாணவ சங்கத் தலைவரும், மாநகரசபை உறுப்பினருமான எஸ்.விஜயகாந் பெற்றுக்கொள்கின்றார். வணிக அறிவுப்போட்டியில் வெற்றி பெற்றவர்களுக்குப் பரிசில் வழங்கலும் இடம்பெறவுள்ளது.

# நல்லூர் - செம்மணி வீதி அகலிப்புப் பணி ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

நல்லூர் செம்மணி வீதி அகலிப்புப் பணிகள் இம்மாதம் முற்பகுதியில் ஆரம்பிக்கப்பட்டுத் தற்போது வேலைகள் துரிதகதியில் நடைபெற்று வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

வீதியின் இருமருங்கிலும் சுமார் இவ்விரண்டு அடிகள் அகலிப்பு செய்யப்பட்டு சீமெந்துக் கலவை இடப்பட்டு வருவதுடன், இப்பணிகளுக்கு கனரக இயந்திரங்களும் பயன்படுத்தப்பட்டு வருகின்றது.

இவ்வீதி அகலிப்பு நடவடிக்கைகளினால் வாகனப் போக்குவரத்துக்கள் இலகுபடுத்தப்படுவதுடன், பாதசாரிகளும் துவிச்சக்கரவண்டிகளில் பயணம் செய்வோரும் எதிர்நோக்கிவந்த நெருக்கடிகள் இனிவரும் காலங்களில் இடம்பெறாது எனவும் தெரிவிக்கப்படுகிறது. (06)

# நடந்துமுடிந்த உள்ளூராட்சிமன்றத் தேர்தல் சிறந்த செய்தியை சர்வதேசத்திற்கு வழங்கியது

## அமைச்சர் மஹிந்த சமரசிங்க

(கொழும்பு)

நடந்துமுடிந்த உள்ளூராட்சி மன்றத் தேர்தல் முடிவுகளின் ஊடாக நாட்டு மக்கள் சர்வ தேசத்துக்கு சிறந்த செய்தியை வெளிப்படுத்தியுள்ளனர். போருக்குப் பின்னர் நாட்டில் அரசாங்கம் மேற் கொண்டு வரும் வேலைத்திட்டங் களுக்கு மக்கள் அங்கீகாரம் வழங்கியுள்ளனர் என்பதனை சர்வதேசம் புரிந்துகொள்ள வேண்டும் என்று மனித உரி மைகள் மற்றும் பெருந்தோட் டக் கைத்தொழில் அமைச்சர் மஹிந்த சமரசிங்க தெரி வித்தார்.

எதிர்க்கட்சிகள் எதனைக் கூறினாலும் எவ்வாறான குற்றச்சாட்டை மேற்கொண்டா லும் மக்கள் அரசாங்கத்தின் மது பாரிய நம்பிக்கை வைத் துள்ளனர் என்பது தேர்தல் முடிவுகள் மூலம் தெளிவா கின்றது என்றும் அமைச்சர் குறிப்பிட்டார். நடந்து முடிந் துள்ள உள்ளூராட்சிமன்றத் தேர்தல் முடிவுகள் தொடர்பில் தகவல் வெளியிடுகையிலேயே அமைச்சர் மேற்கண்டவாறு கூறினார். அமைச்சர் மஹிந்த சமரசிங்க இது தொடர்பில் மேலும் கூறியதாவது: தேர்தல் முடிவுகளின் ஊடாக நாட்டு



மக்கள் சர்வதேச சமூகத்துக்கு சிறந்த செய்தியை வழங்கி யுள்ளனர். தற்போதைய அர சாங்கத்தின் மீதான நாட்டு மக் களின் நம்பிக்கை மீண்டும் ஒருதடவை நிரூபிக்கப்பட்டுள் ளது. இதனை சர்வதேசம் புரிந் துகொள்ளவேண்டும். அத் துடன் யுத்தத்துக்குப் பின்னர் அரசாங்கத்தினால் நாட்டில் மேற்கொள்ளப்பட்டுவரும் வேலைத்திட்டங்களுக்கு மக் கள் அங்கீகாரத்தை வழங்கி யுள்ளனர். ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தலைமையிலான அரசாங்கத்தின் மீது மக்கள் வைத்துள்ள நம்பிக்கை வெளிப்படுத்தப்பட்டுள்ளது.

இதேவேளை எதிர்க்கட்சி கள் எவ்வாறான குற்றச் சாட்டுக்களை அரசாங்கத்தின் மீது சுமத்தினாலும் மக்கள் அவற்றை நம்பாமல் அரசாங் கத்துக்குத் தமது ஆதரவை வெளியிட்டுள்ளனர். எனவே எமது பயணம் வெற்றிகரமாகத் தொடரும். அத்துடன் இந்த தேர்தல் வெற்றி எமக்கு பல விடயங்களை மேலும் வெளிப் படுத்தியுள்ளது.

அதாவது மக்களின் எதிர் பார்ப்புக்களை நாங்கள் துரித கதியில் நிறைவேற்றவேண்டும் என்ற வலியுறுத்தலையும் இந்தத் தேர்தல் ஏற்படுத்தியுள்ளது. அரசாங்கம் மக்களின் எதிர் பார்ப்புக்களை நிறைவேற்றி வருகின்றது. எனினும் மேலும் வலுவான முறையில் அவற் றை நிறைவேற்றவேண்டும் என்று எண்ணுகின்றோம்.

உள்ளூராட்சிமன்ற வடக்கு, கிழக்கு மாகாணங்களில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு மக்களின் பிரதிநிதித்துவம் கிடைத்துள்ளது. எனவே அப் பிரதேசங்களின் உட்கட்டமைப்பு மேம்படுத்தல்கள் அபிவிருத்தி மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பில் கூட்டமைப்பு அர சாங்கத்துடன் தொடர்ந்து பேச்சுக்களை நடத்தவேண்டும்.

அரசாங்கம் தமிழ்த் தேசிய கூட்டமைப்புடன் மூன்றுசுற்று பேச்சுக்களை நடத்தியுள்ளது. தொடர்ந்து கூட்டமைப்பு உள்ளிட்ட அனைத்துத் தமிழ்க் கட்சிகளுடனும் பேச்சு நடத்த அரசாங்கம் எதிர்பார்க்கின்றது.

# எலிக்காய்ச்சல் நோய்ப் பாதிப்பினால் கடந்த 10வாரத்தில் 11பேர் உயிரிழப்பு

(கொழும்பு)

கடந்த பத்து வார காலப் பகுதியில் எலிக்காய்ச்சல் நோயினால் 11பேர் உயிரிழந்த துடன் மேலும் 1784பேர் பாதிக் கப்பட்டு வைத்தியசாலை களில் அனுமதிக்கப்பட்டுள்ள தாக சுகாதார அமைச்சின் தொற்றுநோய்ப் பிரிவு தெரி வித்துள்ளது.

இறுதியாக எடுக்கப்பட்ட புள்ளி விபரங்களின்படி கடந்த ஜனவரி மாதத்தில் 230 பேரும், பெப்ரவரி மாதத்தில் 567பேரும் இந்த மாதத்தில் 987 பேரும் எலிக்காய்ச்சலால் பாதிக்கப்பட்டுள்ளனர்.

குருநாகல் மாவட்டத்தி லேயே பெரும்பாலானவர்கள் இந்தக் காய்ச்சலினால் பாதிக் கப்பட்டுள்ளனர். இந்த மாவட் டத்தில் மட்டும் 814பேர் இந்தக் காய்ச்சலால் பாதிக்கப்பட்டு வைத்தியசாலைகளில் அனு மதிக்கப்பட்டுள்ளனர். அத்துடன் கம்பஹா, அநுராதபுரம், அம் பாந்தோட்டை ஆகிய மாவட் டங்களும் பெருமளவில் பாதிக் கப்பட்டுள்ளன.

மழைகாலங்களிலேயே இந்தக் காய்ச்சல் வேகமாகப் பரவுவதாகவும், பெருமளவில் விவசாயிகளே இந்த நோய்த் தாக்கத்திற்கு ஆளாவதாகவும் தொற்றுநோய்ப் பிரிவு மேலும் தெரிவித்தது.

# நாணயச் சுழற்சி முறையில் பிரதேசசபை உறுப்புரிமை

(கொழும்பு)

அநுராதபுரம் மாவட்டத்தில் பலாகல பிரதேச சபைக்கு ஐக் கிய தேசியக் கட்சி சார்பில் போட்டியிட்டு சம அளவிலான விருப்பு வாக்குகளைப் பெற்ற இரண்டு உறுப்பினர்களுக்கு நாணயச் சுழற்சி மூலம் பிரதேச சபை உறுப்புரிமை வழங்கப் பட்டுள்ளது.

ஆர்.எஸ்.கே. ரத்னாயக்க மற்றும் எச்.எல்.இர்ஷாத் ஆகி யோர் தேர்தலில் போட்டியிட்டு தலா 1840 விருப்பு வாக்கு களைப் பெற்றுள்ளனர்.

இவர்களில் யாருக்கு பிர தேச சபை உறுப்புரிமை வழங்குவதென பிரச்சினை எழவே நாணயச் சுழற்சி முறை யில் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இதன்படி நேற்று அநுராத புர மாவட்ட தெரிவத்தாட்சி அதிகாரி எச்.எம்.கே. ஹேரத் முன்னிலையில் நாணய சுழற்சி மேற்கொள்ளப்பட்டது.

நாணய சுழற்சி முடிவின் படி முதல் இரண்டு வருடங் களுக்கு ஆர்.எஸ்.கே. ரத்னா யக்கவும், இறுதி இரண்டு வரு டங்களுக்கு எச்.எல். இர்ஷாத்தும் பிரதேச சபை உறுப்பினராக செயற்பட வாய்ப்பு வழங்கப் பட்டுள்ளது.

# சபைத் தலைவர்களின் பட்டியலை 24ஆம் திகதிக்கு முன் சமர்ப்பிக்குக

## கட்சிகளிடம் தேர்தல் ஆணையாளர் கோரிக்கை



(கொழும்பு)

உள்ளூராட்சிச் சபைகளின் புதிய தலைவர் மற்றும் உப தலைவர் பதவிகளுக்கான பெயர்களை எதிர்வரும் 24ஆம் திகதிக்கு முன் சமர்ப்பிக்குமாறு தேர்தல் ஆணையாளர் சகல அரசியல் கட்சிகளையும் கோரி யுள்ளார்.

ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி இம்முறை விருப்பு வாக்கு அடிப்படையில் அன்றி கட்சியின் தலைமைத்து வத்தின் தீர்மானப் பிரகாரம் தலைவர், உப தலைவர்களை நியமிக்க முடிவெடுத்துள்ளது.

அதற்கான கலந்துரை யாடலுக்காக சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் மத்திய செயற்குழு நாளை கொழும் பில் கூட்டப்படவுள்ளது.

ஆயினும் அதன் பங்காளிக் கட்சிகளின் சார்பில் நிறுத்தப் பட்டிருந்த வேட்பாளர்கள் கூடு தல் விருப்பு வாக்குகளைப் பெற்றிருக்கும் பட்சத்தில் அவர் களே தலைவர்களாக நியமிக் கப்படுவதற்கான வாய்ப்புள்ள தாகத் தெரிய வருகின்றது.

ஐக்கிய தேசியக் கட்சி வழமை போன்று கூடுதல் விருப்பு வாக்கின் அடிப்படை யில் தலைவர், உபதலைவர் பதவிகளை நிரப்பவுள்ளது. தமிழரசுக்கட்சி கைப்பற்றியுள்ள உள்ளூராட்சி சபைகளின் நிலை தொடர்பாக அதன் மத்திய குழு கூடி முடிவெடுக்கவுள்ளது.

# உள்ளூராட்சி சபைத் தேர்தலில் மக்களே படுதோல்வியடைந்தனர்

## என்கிறார் விஜித ஹேரத் எம்.பி

(கொழும்பு)

நடைபெற்று முடிந்துள்ள உள்ளூராட்சிச் சபைத் தேர் தல்களில் அரசாங்கம் அமோக வெற்றி பெற்றிருந்தாலும் நாட்டு மக்கள் படுதோல்வி யடைந்துவிட்டனர் என்று தெரிவித்துள்ள ஜே.வி.பி. தமது கட்சி தோல்வியடையவில்லை யென்றும் பின்னடைவைக் கண்டு துவண்டு விடப்போவ தில்லையென்றும் தெரிவித்தது.

அரசாங்கத்தின் வெற்றி மக்களை வாழ வைக்கக் கூடி யனவா என்பது இந்நாட்டின் நிரந்தரமான சந்தேகமாக பதிந்து விட்டது என்றும் அக் கட்சி குறிப்பிட்டுள்ளது.

உள்ளூராட்சித் தேர்தல் களில் தோல்வியடைந்துள்ள ஜே.வி.பி.யின் அடுத்தகட்ட நட வடிக்கைகள் குறித்து அக் கட்சியின் பிரசாரச் செயலா ளரும் எம்.பி.யுமான விஜித ஹேரத் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் கூறுகையில், பயங்கரவாதம் வெற்றி கொள்ளப்பட்டது. ஆனால் அதன் பலாபலன் இதுவரையில் மக்களைச் சென் றடையவில்லை. ஜனாதிபதித் தேர்தலில் வெற்றி பெற்ற ஜனாதிபதி, தான் வழங்கிய வாக்குறுதியை நிறைவேற்றாது மக்களை ஏமாற்றியுள்ளார்.

அதன் பின்னர் நடைபெற்ற பொதுத் தேர்தலில் அரசாங் கம் தனது பிரசார மேடைகளில் பல்வேறு வாக்குறுதிகளை வாரி வழங்கியது. ஆனால் நடைமுறையில் எதுவுமில்லை. விலைவாசி அதிகரிப்பும் வரி களும் வாழ்க்கைச் சுமைகளும் நாளுக்கு நாள் அதிகரித்தனவே தவிர குறைந்த பாடில்லை. மக்களுக்கான நிவாரணம் என்பது காணாமலே போய் விட்டது.

இவ்வாறான சூழ்நிலை களுக்கு மத்தியில்தான் உள் ளூராட்சிச் சபைகளும் அரசாங் கத்தின் வசம் சென்றிருக்கின் றன. இது அரசாங்கத்துக்கு கிடைத்த அமோக வெற்றி



யென்றும் அரசாங்கத்துக்கிருக் கின்ற மக்கள் செல்வாக்கு அதி கரித்திருக்கின்றது என்றும் ஆளும் தரப்பினர் மார்தட்டிக் கொள்கின்ற போதிலும், அர சாங்கத்துக்கு வாக்களித்த வாக்காளர்களால் நாட்டின் ஒட்டுமொத்த மக்களும் தோற் றுப்போய் விட்டனர் என்பதே உண்மையாகும்.

ஆனால் ஜே.வி.பி.யைப் பொறுத்தவரையில் எமது கட்சி தோல்வியடையவில்லை. எமக்கு ஏற்பட்டிருக்கின்ற பின் னடைவையும் மக்களின் தீர்ப் பினையும் ஜனநாயக ரீதியில் ஏற்றுக் கொள்கின்ற பக்குவம் எமக்கு நிறையவே இருக் கின்றது. அந்த வகையில் தேர் தல்களில் வாக்களிக்கா தோருக்கும் நாம் மக்களுக்காக வே எம்மை அர்ப்பணித்திருக் கின்றோம் என அவர் மேலும் தெரிவித்தார்.

# வெலிக்கடைச் சிறைச்சாலை பெண்கள் பிரிவில் கைப்பற்றப்பட்ட பணமும் தொலைபேசிகளும்

(கொழும்பு)

வெலிக்கடை சிறையின் பெண்கள் பிரிவில் மேற் கொள்ளப்பட்ட விசேட சோத னையின் போது பெருந்தொ கையான மொபைல் போன் களும், பணமும் கைப்பற்றப் பட்டுள்ளது.

கடந்த 19ஆம் திகதி மேற் கொள்ளப்பட்ட பிரஸ்தாப சோதனையின் போது சிறைக் கூண்டுகளுக்குள் மறைத்து வைக்கப்பட்டிருந்த 44 மொபைல் போன்களும், ரூபா ஆறாயிரம் பணமும் கைப்பற் றப்பட்டுள்ளதாக சிறைச் சாலைகள் அதிகாரியொருவர் தெரிவித்தார்.

வெலிக்கடை பெண்கள் பிரி வின் சிறைக்கூண்டுகளில் மேற் கொள்ளப்பட்ட சோதனை களின் போது இந்தளவு பெருந் தொகையான மொபைல் போன்கள் கைப்பற்றப்பட்டது இதுவே முதல் தடவை என்று கூறப்படுகின்றது.

மொபைல் போன்கள் மற் றும் பணம் என்பன மட்டுமன்றி, சிம்கார்ட்கள்,மின்சார சாதனங் கள் உள்ளிட்ட பல பொருட் களும் பெண்கள் சிறைக்கூண்டு களுக்குள்ளிருந்து கைப்பற்றப் பட்டுள்ளன.

தற்போது சிறைச்சாலை அத்தியட்சகர் பொறுப்பில் வைக்கப்பட்டிருக்கும் மேற்படி மொபைல் போன்கள் மற்றும் சிம்கார்ட்கள் என்பவற்றின் உரி மையாளர்களைக் கண்டறிந்து கொள்வதற்கு தொலைபேசி சேவை வழங்கும் நிறுவனங் களின் உதவியை சிறைச் சாலைகள் திணைக்களம் நாடி யுள்ளது.

# ஓய்வுபெறும் முடிவில் மாற்றமில்லை தென்னாபிரிக்க அணித் தலைவர்



(ஜோகன்னஸ்பேர்க்)

கிரிக்கெட்டிலிருந்து ஓய்வு பெறும் முடிவில் மாற்றமில்லையெனத் தென்னாபிரிக்க அணியின் கப்டன் கிரீம் ஸ்மித் தெரிவித்துள்ளார்.

உலகக் கிண்ணத்துக்குப் பிறகு ஒருநாள் போட்டியிலிருந்து ஓய்வு பெறப்போவதாக அண்மையில் ஸ்மித் அறிவித்திருந்தார். ஸ்மித் தனது முடிவை மாற்றிக் கொள்ளவேண்டும் என்று தென்னாபிரிக்க கிரிக்கெட் சபை நிர்வாகிகள் வேண்டுகோள விடுத்திருந்தனர். ஆனால் தனது முடிவில் மாற்றமில்லை என்று ஸ்மித் மீண்டும் அறிவித்துள்ளார்.

அவர் மேலும் கூறியதாவது: ஒருநாட் கிரிக்கெட்டிலிருந்து ஓய்வு பெறப்போவதாக நான் ஏற்கெனவே அறிவித்துவிட்டேன். இந்த முடிவு இப்போது எடுக்கப்பட்டது அல்ல. நீண்ட நாட்களுக்கு முன்னதாகவே இந்த முடிவை நான் எடுத்துவிட்டேன். ஒருநாள் கிரிக்கெட்டிலிருந்து ஓய்வு பெறுவதற்கு இதுவே சரியான நேரம் என்று நான் நம்புகிறேன்.


இளம் வயதிலேயே நான் தென்னாபிரிக்க அணியின் கப்டன் பொறுப்பை ஏற்றேன். அந்த வயதில் அது எனக்கு மிகப் பெரிய பதவி. முதல் 4 ஆண்டுகள கடுமையான சவால்களைச் சந்தித்தேன். பின்னர் அணிக்கு வெற்றிகள் குவிந்தன. அணிக்குத் தலைமையேற்றுச் செல்வது நிச்சயம் சவாலான விடயம் தான். அணித் தேர்வில் அரசியல் குறுக்கீடு, அணியின் மீது விமர்சனங்கள், அணித் தலைமை மீது விமர்சனங்கள் இத்தனையையும் தாங்கிச் செல்வது என்பது சாதாரண விடயமல்ல.

2008-இல் இங்கிலாந்தையும், அவுஸ்ரேலியாவையும் வீழ்த்தியதை மறக்க முடியாது. டெஸ்ட அணிக்கு மட்டும் சிறிது காலம் நான் கப்டனாகத் தொடர்வேன். இநத உலகக் கிண்ணப் போட்டி தென்னாபிரிக்க அணிக்கு முக்கியமான போட்டியாகும். உலகக் கிண்ணப் போட்டியில் நான் மிகப்பெரிய ஸ்கோரை அடிக்கவில்லை என்பது ஏமாற்றமான விடயமாக இருக்கிறது என்றார் அவர்.

இதுவரை 146 ஒரு நாள் ஆடடங்களில் தென்னாபிரிக்க அணிக்குக் கப்டனாக ஸ்மித் செயல்பட்டுள்ளார் என்பது குறிப்பிடத் தக்கது

# அவுஸ்ரேலிய அணியின் பலவீனத்தை சிறப்பாகப் பயன்படுத்திக் கொள்வோம்

## யுவராஜ்சிங் கூறுகிறார்



(சென்னை)

கால் இறுதியில் அவுஸ்ரேலியாவை சந்திக்க நாங்கள் தயாராக இருக்கிறோம். அந்த அணி பாகிஸ்தானிடம் தோற்று இருக்கிறது. அவுஸ்ரேலிய அணி சிறந்தது தான். தொடர்ந்து 3 முறை உலகக் கிண்ணத்தை வென்றுள்ளது. ஆனால் அப்போது இருந்த மெக்ராத், ஷேன்வோர்ன், கில்கிறிஸ்ட் ஆகியோர் இப்போது இல்லை. பொண்டிங் தற்போது நல்ல நிலையில் இல்லை எனத் தெரிவித்தார்.

அவுஸ்ரேலியாவின் பலவீனத்தை நாங்கள் சரியாகப் பயன்படுத்திக்கொள்வோம். அந்த அணியை வீழ்த்த முடியும் என்ற நம்பிக்கை இருக்கிறது. ஹாட்பிட்ச் பந்தை இந்திய வீரர்கள் சிறப்பாக ஆடக்கூடியவர்கள். இதனால் தான் டெஸ்ட் தரவரிசையில் முதலிடத்திலும், ஒரு நாள் போட்டியில் 2ஆவது இடத்தில் உள்ளோம்.

மேற்கிந்தியத் தீவுக்கு எதிரான போட்டி தொடங்குவதற்கு முன்பு எங்களது ஒரே குறிக்கோள் வெற்றி பெற வேண்டும் என்பதுதான். கால் இறுதி பற்றிச் சிந்திக்கவில்லை. மேற்கிந்திய அணி ஒரு கட்டத்தில் நல்ல நிலையில் இருந்தது. ஜாகீர்கான் 2 முக்கிய விக்கெட்டைக் கைப்பற்றியது தான் ஆட்டத்தின் திருப்பு முனை. அஸ்வின், நான் ஹர்பஜன் ஆகியோரும் சிறப்பாகப் பந்து வீசினோம். நான் சதம் அடிக்க வேண்டும் என்று விரும்பினேன். அதற்கு ஏற்றவாறு ஆட்டம் அமைந்தது மகிழ்ச்சி அளிக்கிறது.

# நியூசிலாந்து அணியில் மாற்றம்


(புதுடில்லி)

நியூசிலாந்து வீரர் ஹமிஸ் பென்னட் காயம் காரணமாக உலகக் கோப்பையிலிருந்து விலகியுள்ளார். அவருக்குப் பதிலாக டரல் ரபி சேர்க்கப்பட்டுள்ளார். இதற்கு சர்வதேச கிரிக்கெட் சபை (ஐசிசி) அனுமதியளித்துள்ளது.

கடந்த 18ஆம் திகதி மும்பையில் நடைபெற்ற இலங்கைக்கு எதிரான ஆட்டத்தின்போது ஹமிஸ் பென்னட்டுக்கு இடது காலில் காயம் ஏற்பட்டது. இதையடுத்து அவருக்குப் பதிலாக டரல் ரபியை அணியில் சேர்க்க சர்வதேச கிரிக்கெட் சபையிடம் கோரயது நியூசிலாந்து கிரிக்கெட் சபை. அதன்பேரில் ஐ.சி.சி. அனுமதி தெரிவித்துள்ளது. இந்தத் தகவலை ஐ.சி.சி.யின் தொழில்நுட்பக் குழு நியூசிலாந்து கிரிக்கெட் சபைக்குத் தெரிவித்துள்ளது.

# இந்திய அணியுடனான போட்டியின் போது வெற்றிபெறும் வாய்ப்பை தவறவிட்டோம்

## மேற்கிந்திய அணித் தலைவர் சமி



(சென்னை)

நாங்கள் ஒரு கட்டத்தில் 2 விக்கெட் இழப்புக்கு 154 ரன் என்ற வலுவான நிலையில் இருந்தோம். வெற்றிபெற நல்ல வாய்ப்பு இருந்தது. இந்த வாய்ப்பை சரியாகப் பயன்படுத்திக் கொள்ளாமல் தவற விட்டோம். இப்படி விக்கெட் சரிவது இது 3ஆவது முறையாகும் என நேற்றுமுன்தினம் இந்திய அணியுடன் இடம் பெற்ற போட்டியில் தோல்விய டைந்த மேற்கிந்தியத் தீவுகள் அணித் தலைவர் டரன் சமி தெரிவித்தார்.

தென்னாபிரிக்கா-இங்கிலாந்துக்கு எதிராக இப்படித்தான் நடந்தது. நல்ல வேளையாக லீக் ஆட்டம என்பதால் பிரச்சினை இல்லை. விக்கெட்டுகள் அடிக்கடி சரிவது கவலையளிக்கிறது. யுவராஜ்சிங் மிகவும் அபாரமாக ஆடினார். பந்து வீச்சிலும் சிறப்பான பங்களிப்பை வெளிப்படுத்தினார். டெண்டுல்கர், கம்பீர் ஆகியோரை எளிதில் அவுட் செய்தோம்.

யுவராஜ்சிங்கின் 2 பிடிகளை நான் தவறவிட்டேன். இதை அவர் சரியாகப் பயன்படுத்திக் கொண்டு சதம் அடித்தார். பிடி தவறவிட்டது மிகுந்த ஏமாற்றம் அளிக்கிறது. பாகிஸ்தானுக்கு எதிரான கால் இறுதி ஆட்டத்தில் சிறப்பாக விளையாடுவோம நாங்கள் பாகிஸ்தானைத் தோற்கடித்து இந்திய அணி அவுஸ்ரேலியாவை வீழ்ததினால் நாங்கள் அரை இறுதியில் இந்தியாவைப் பழிதீர்ப்போம். கால் இறுதியில் கிறிஸ்கெய்ல் விளையாடுவார் எனத் தெரிவித்தார்.




# அமெரிக்க டெனிஸ் போட்டி சானியா ஜோடி சம்பியன்



(வேல்ஸ்)

அமெரிக்காவின் இன்டியன் வேல்ஸ் நகரில் பி.என்.பி. பரிபாஸ் ஓபன் டென்னிஸ் போடடி நடந்து வருகிறது. இதன பெண்கள் இரட்டையர் இறுதி ஆட்டத்தில் இந்தியாவின் சானியா மிர்சா ரஷ்யாவின் எலினா வெஸ்னினா ஜோடி, அமெரிக்காவின் பெதானிமெடக் சாண்ட்ஸ-மேகன் சாக்னெஸ்சே இணையை எதிர்கொண்டது. முதல் செட்டை 6-0 என்ற கணக்கில் 24 நிமிடங்களில் எளிதில் தனதாக்கிய சானியா ஜோடிக்கு, 2ஆவது செட்டில் உள்ளூர் ஜோடி கடும சவால் அளித்தது. இதில் 5-1 என்ற கணக்கில் முன்னிலை பெற்ற அமெரிக்க ஜோடி 2 ஆவது செட்டை வெல்லும் நிலைக்கு நெருங்கியது. இதன் பிறகு சரிவில் இருந்து எழுச்சி கண்ட சானியா ஜோடி வரிசையாக அடுத்த 6 சுற்றுக்களை வென்று, இந்த செட்டையும் கைப்பற்றி எதிர் ஜோடியை வியப்பில் ஆழ்த்தியது.

முடிவில் சானியா-வெஸனினா கூட்டணி 6-0, 7-5 என்ற நேர் செட் கணக்கில் வெற்றியை ருசித்து சாம்பியன் பட்டத்தை தட்டிச் சென்றது. இந்தத் தொடரில் சானியா-வெஸ்னினா ஒரு செட்டைக் கூட இழக்காமல் மகுடம் சூடியிருப்பது குறிப்பிடத் தக்கது. சானியாவுக்கு இது 10ஆவது இரட்டையர் பட்டமாகும். வெஸ்னினாவுக்கு இது 4ஆவது பட்டமாகும். அதே சமயம் இருவரும் இணைந்து பெற்ற முதல் பட்டமாகும்.

# "அவுட்" எனத் தெரிந்து கொண்டதால் நடுவரின் தீர்ப்புக்கு காத்திராத சச்சின்



(சென்னை)

சென்னையில் நேற்றுமுன் தினம் நடைபெற்ற மேற்கிந்தியத் தீவுகளுக்கு எதிரான போட்டியில் பந்து மட்டையில் பட்டு பிடியானது தெரிந்தவுடன் நடுவரின் தீர்ப்புக்கு காத்திருக்காமல் பெவிலியன் நோக்கி நடைகட்டிய சச்சின் டெண்டுல்கரின் செயலை மேற்கிந்திய அணியின் கப்டன் டரன் சமி பாராட்டியுள்ளார்.


நேற்றுமுன்தினம் தனது 100 ஆவது சதத்தை எட்டுவார் என்று ரசிகர்கள் கும்பல் ஆர்வமாகக் காத்திருக்க ரவி ராம்பாலின் எதிர்பாராத அபாரமான பந்து டெண்டுல்கரின் கையுறையின் அடியில் பட்டு விக்கெட் கீப்பரிடம் பிடியாகச் சென்றது.

நடுவர் அந்த முறையீடு குறித்து முடிவெடுக்கும் முன்னரே சச்சின் டெண்டுல்கர் தான் அவுட் என்று தெரிந்ததால் பெவிலியன் நோக்கி நடக்கத் தொடங்கினார். இது சச்சின் டெண்டுல்கரின் மீதான மதிப்பை அதிகரித்துள்ளது. தான் ஒரு ஜெண்டில்மேன் என்பதை சச்சின் நிரூபித்து விட்டார். 17,000 ரன்கள் எடுத்த ஒரு வீரர் தான் அவுட் என்று தெரிந்தவுடன் தானே வெளியேறுவது பாராட்டத்தக்கது என்றார் சமி.

இந்த உலகக் கிண்ணக் கிரிக்கெட்டில் ரிக்கி பொண்டிங் அன்று பாகிஸ்தானுக்கு எதிராக நடைபெற்ற போட்டியில் ஹ.ஃபீஸ் பந்தில் ஆட்டமிழந்தும் நடுவர் தீர்ப்பிற்குப் பிறகே வெளியேறினார். அது குறித்து பொண்டிங்கிடம் கேட்டபோது, பந்து மட்டையில் பட்டது எனக்குத் தெரியும் இருந்தும் நடுவர் தீர்ப்பிற்குப் பிறகு வெளியேறுவதுதான் சரி என்பது தான் எனது கொள்கையாக இருந்து வந்துள்ளது என்றார்.

# அவுஸ்ரேலியாவுடனான போட்டியில் முழுத்திறமையை வெளிப்படுத்துவோம்

## டோனி தெரிவிப்பு



(சென்னை)

அவுஸ்ரேலிய அணியுடன் நடைபெறவுள்ள காலிறுதிப் போட்டியில் முழுத்திறமையையும் வெளிப்படுத்துவோமென இந்திய அணித் தலைவர் டோனி தெரிவித்தார்.

சென்னையில் நேற்றுமுன் தினம் இடம்பெற்ற மேற்கிந்தியத் தீவுகள் அணியுடனான வெற்றிக்குப் பின்னரேயே அவர் இவ்வாறு தெரிவித்தார். இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்ததாவது-

அவுஸ்ரேலிய அுணி மிகவும் பலம் வாய்ந்ததுடன், தமது ஆற்றலைச் சிறப்பாக வெளிப்படுத்தும் அணியாகவும் உள்ளது.

எனவே அந்த அணியுடனான போட்டியில் எவ்வாறு ஆடுவது என்பது குறித்து தயாரிப்புகளை மேற்கொள்வோம். அந்த அணியுடனான போட்டியில், எமது முழுத திறமைகளையும் வெளிப்படுத்துவோம்.

மேற்கிந்தியத் தீவுகள் அணியுடனான போட்டியில் அந்த அணியின் ஆரம்ப வீரர் ஸ்மித்தை, சகீர்கான் ஆட்டமிழக்கச் செய்ததே போட்டியின் திருப்பு முனையாக அமைந்தது. இதனை சகீர் கான் சிறப்பாகச் செய்து முடித தார்.

இதன் மூலம் மேற்கிந்திய அணியின் துடுப்பாட்ட வீரர்களுக்கு அழுத்தத்தைக் கொடுகக முடிந்ததெனவும் அவர் தெரிவித்தார்.

# ஆஷஸ் ஏவுகணைத் திட்டத்திலும் ஊழல் புரிந்ததாக மூவர் கைது

(சென்னை)

ஆஷஷ் ஏவுகணைத் திட்ட வளர்ச்சியை தாமதப்படுத்தியதாக மூன்று பேர்களை சி.பி.ஐ., அதிகாரிகள் கைது செய்துள்ளனர். இந்திய ராணுவத்தில் ஆஷஸ் ஏவுகணைத் திட்டம் ஒரு மைல்க் கல்லாகக் கருதப்பட்டது.

அதை இயக்குவதற்குத் தேவையான மோடம் போன்ற கருவிகளை வாங்குவதில் பண இழப்பீடு செய்ததாக சொசைட்டி பார் அப்ளைடு மைக்ரோவேவ் எலக்ட்ரானிக்ஸ் இன்ஜினியரிங் அண்டு ரிசர்ச்(சமீர்) என்றழைக்கப்படும் நிறுவனத்தின் முன்னாள் இயக்குநர்கள் கருணாகரன் மற்றும் கே.ஆர் கினி ஆகியோர் உட்பட மூன்று பேர் சி.பி.ஐ.துறையால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இவர்கள் திட்டங்களில் முறைகேடு செய்தல் மற்றும் முன்னெச்சரிக்கை நடவடிக்கை வழக்குகளின் கீழ் கைது செய்யப்பட்டுள்ளனர். சமீர் என்றழைக்கப்படும் நிறுவனம் முழுக்க மத்திய அரசின் தகவல் தொழிலநுட்பத்துறையின் உதவியின் கீழ் நடத்தப்பட்டு வரும் நிறுவனமாகும்.

இதனுடன் சென்னை மற்றும் பெங்களூரை மையமாகக் கொண்டு செயற்படும் சாம்ஷின் பிரிசிசன் நிறுவனம் ஆஷஸ் ஏவுகணைக்குத் தேவையான மோடம் தயாரிப்புக்கான ஒப்பந்தம் பெற்றதாகக் கூறப்படுகிறது.

இதன் இயக்குநர் ரத்தினவேல் சமீர் நிறுவனத்தின் முன்னாள் இயக்குனர் கருணாகரனின் நண்பவராவார். இவர்கள் மூவரும் இணைந்து மோசடி வழக்கில் ஈடுபட்டதாக கைது செய்யப்பட்டுள்ளனர். கைது செய்யப்பட்ட இவர்கள் மூவரும் முதலாம் திகதிவரை நீதிமன்றக் காவலில் வைக்க நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

# தூக்கிலிடும் உத்தரவு நகல் கசாப்பிடம் வழங்கப்பட்டது

(மும்பை)



மும்பைத் தாக்குதல் தீவிரவாதி கசாப்பிடம் தூக்கிலிடும் உத்தரவு நகல் வழங்கப்பட்டது. மும்பையில் கடந்த 2008 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் பாகிஸ்தான் தீவிரவாதிகள் அப்பாவி மக்களை சுட்டுக் கொன்றனர்.

இந்தத் தாக்குதலில் ஈடுபட்ட தீவிரவாதி கசாப் மட்டும் உயிருடன் பிடிபட்டான். மற்ற 9 தீவிரவாதிகளும் சுட்டுக் கொல்லப்பட்டனர். தீவிரவாதி கசாப் மீது மும்பை தனிக்கோர்ட்டில் வழக்குத் தொடரப்பட்டு தூக்குத் தண்டனை விதிக்கப்படடது.

இதை எதிர்த்து கசாப் மும்பை உயர் நீதிமன்றத்திற்கு அப்பீல் செய்தான். தூக்குததண்டனையை உயர் நீதிமன்றில் உறுதிசெய்தது. கசாப் தற்போது மும்பை ஆர்தர் ரோடு சிறையில் அடைக்கப்பட்டுள்ளான். அவனைத் தூக்கிலிடுவதற்கான ஏற்பாடுகளில் சிறை அதிகாரிகள் ஈடுபட்டுள்ளனர்.

முதல் நடவடிக்கையாக கசாபபின் தூக்குத் தண்டனையை உறுதி செய்து உயர் நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பு நகல் ஹோலி பண்டிகையின் முதல் நாளான கடந்த சனிக்கிழமை கசாப்பிடம் வழங்கப்பட்டது.

கசாப்பின் வக்கீல் பர்கானா ஷா, யாகூப் சைக் ஆகியோர் ஜெயிலுக்குச் சென்று ஜெயில் அதிகாரிகளைச் சந்தித்துத் தீர்ப்பு நகலை வழங்கினார்கள். ஜெயில் அதிகாரிகள் அதைப் பெற்றுக் கொண்டு கசாப்பிடம் வழங்கினார்கள்.

1000 பக்கங்கள் கொண்ட உத்தரவு நகல் 5 பாகங்களாக இடம் பெற்று இருந்தது. அதை கசாப் பெற்றுக்கொண்டார்.

# வேட்பாளர் அறிவிப்பு தாமதத்தால் தேர்தல் பணிகளில் பெரும் பாதிப்பு

(சென்னை)

தமிழக சட்டசபை தேர்தலுக்கான வேட்புமனு தாக்கல் கடந்த 19 ஆம் திகதி தொடங்கியது. வருகிற 26 ஆம் திகதி வேட்புமனுத் தாக்கல் முடிவடைகிறது. வேட்புமனுத் தாக்கல் செய்ய இன்னும் 6 நாட்களேயுள்ளன.

ஆனால் அ.தி.மு.க. - தே.மு.தி.க. தொகுதிப் பங்கீடு தாமதத்தால் இரண்டு கட்சிகளிலும் வேட்பாளர்களை அறவிப்பதிலும் தாமதம் ஏற்பட்டுள்ளது.

கம்யூனிஸ்ட் கட்சிகளின் தொகுதிப் பங்கீட்டிலும் தாமதம் ஏற்பட்டதால் வேட்பாளர்களை அறிவிப்பதிலும் தாமதம் ஏற்பட்டுள்ளது. மார்க்சிஸ்ட், இந்திய கம்யூனிஸ்ட் கட்சிகளின் வேட்பாளர்கள் பட்டியல் நாளை வெளியாகலாம் என்று எதிர்பார்க்கப்படுகிறது. காங்கிரஸ் கட்சியின் வேட்பாளர்கள் பட்டியலை டெல்லி மேலிடம் தான் இறுதி செய்து வெளியிடும். எனவே, எல்லாத் தேர்தல்களிலும் தாமதமாகவே அக்கட்சியின் வேட்பாளர்கள் வேட்புனுமனுத் தாக்கல் செய்வார்கள்.

இந்த முறை தி.மு.க. வேட்பாளர்கள் பட்டியல் 17 ஆம் திகதியே வெளியிடப்பட்டு விட்டது. தி.மு.க. கூட்டணியில் காங்கிரஸ் போட்டியிடும் 63 தொகுதிகள்தான் முதன் முதலில் அறிவிக்கப்பட்டது. ஆனாலும் வேட்பாளர் பட்டியல் எப்போது வெளியாகும் என்பது இதுவரை முடிவாகவில்லை. தி.மு.க., பா.ம.க., விடுதலை சிறுத்தைகள், முஸ்லிம் லீக், பெருந்தலைவர் மக்கள் கட்சி, மூவேந்தர் முன்னேற்றக்கழகம், கொங்கு வேளாளர் முன்னேற்றக் கழகம் கட்சிகளின் வேட்பாளர்கள் அறிவிக்கப்பட்டு விட்டது. தி.மு.க. வேட்பாளர்கள் சிலர் முதல் நாளிலேயே வேட்புமனுத் தாக்கல் செய்து விட்டனர்.

இந்தத் தொகுதிகளிலும் வேட்பாளர்கள் அறிவிக்கப்பட்டுள்ள தொகுதிகளிலும் அந்த கட்சி தொண்டர்கள் தேர்தல் பணிகளைத் தொடங்கி விட்டனர். காங்கிரசார் தேர்தல் டிக்கெட் வாங்கும் முயற்சியில் இருப்பதால் தேர்தல் பணிகள் எதிலும் தீவிரமாக ஈடுபடவில்லை.

இது போல் அ.தி.மு.க. கூட்டணியில் தொகுதிப் பங்கீடு குழப்பம், தாமதம், வேட்பாளர் அறிவிப்பில் தாமதம் ஆகியவற்றால் அந்தக் கூட்டணிக் கடசிகளாலும் இதுவரை தேர்தல் பணிகளில் தீவிரம் காட்ட முடியவில்லை. வேட்பாளர்களின் இறுதிப் பட்டியல் 30 ஆம் திகதி வெளியாகிறது.

ஏப்ரல் 13 இல் வாக்குப் பதிவு. 11 ஆம் திகதியுடன் பிரசாரம் ஓய்கிறது.

எனவே தேர்தல் பிரசாரத்துக்கு 12 நாட்களே உள்ளன. இப்போதே தேர்தல் பிரசாரத்தை தொடங்கினால்தான் வேட்பாளர்கள் தொகுதி முழுவதும் சுற்றுப்பயணம் செய்து பிரசாரம் செய்ய முடியும். வேட்பாளர்கள் அறிவிப்பு தாமதம் காரணமாக கட்சித் தொண்டர்கள் தேர்தல் பணிகளை எவ்வாறு செய்வது என்பது முடிவாகவில்லை. கட்சி நிர்வாகிகளுக்கும் என்ன பணிகள் என்பது ஒதுக்கப்படவில்லை. ஏற்கனவே தேர்தல் கமிஷன் பல்வேறு தடைகளை விதித்துள்ளது. இப்போது வேட்பாளர் அறிவிப்பும் தாமதம் ஆவதால் தொண்டர்கள் மத்தியில் குழப்பம் ஏற்பட்டுள்ளது.




# விஜயகாந்துக்கு எதிராக நடிகர் வடிவேலு பிரசாரம்



(மும்பை)


விஜயகாந்த் - வடிவேலு மோதல் விவ காரம் இன்னும் முடிந்த பாடில்லை. புகைந்து கொண்டு தான் இருக்கிறது.

விஜயகாந்தை எதிர்த்துப் போட்டியிடுவேன் என்று வடிவேலு முன்பு அறிவித்திருந்தார். அந்த முடிவில் இப்போது கொஞ்சம் மாறுதல். விஜயகாந்துக்கு எதிராக பிரச்சாரம் செய்யவிருக்கிறார். வரும் 23 ஆம் திகதி முதல் அவர் பிரசாரத்தை ஆரம்பிக்கிறார்.

தி.மு.க.வுக்கு ஆதரவாகத் தமிழகம் முழுவதும் பிரசாரம் செய்கிறார். குறிப்பாக தே.மு.தி.க போட்டியிடும் தொகுதிகளில் முகாமிட்டுப் பிரசாரம் செய்து, அக்கட்சியைத் தோற்கடிக்கச் சபதம் ஏற்றுள்ளார்.

இதையடுத்து நடிகர் வடிவேலு நேற்று தி.மு.க தலைவர் கருணாநிதியைச் சந்தித்து ஆசி பெற்றார்.

# அ.தி.மு.கவுக்கு விவேக் தி.மு.க.வுக்கு வடிவேலு



நடிகர் வடிவேலு தி.மு.க.வுக்கு ஆதரவாக பிரச்சாரம் செயகிறார். நாளை தொடக்கம் அவர் பிரசாரத்தைத் தொடங்குகிறார். முதல்வர் கருணாநிதியை மீண்டும் ஆட்சியல் அமர்த்த அயராது பாடுபடுவேன் என்று வடிவேலு கூறியுள்ளார்.

தி.மு.க களத்தில் நடிகர் வடிவேலு இறங்கிவிட்டதை அடுத்து அ.தி.மு.க களத்தில் நடிகர் விவேக்கை இறக்க முயற்சிகள் நடந்துவருகிறது.

மதுரை மண்ணைச்சேர்ந்த இந்த சிரிப்பு நடிகர்கள் இருவரும் எதிர் எதிர் அணியில் நின்று சீரியசாகப் பேசப்போகிறார்கள்.

# ஜப்பானில் ஏற்பட்ட அனர்த்தத்தை அடுத்து மரபுசாரா திட்டத்தினால் மின் உற்பத்திகள்

(புனே)

ஜப்பானில் ஏற்பட்ட பூகம்பம், சுனாமியால் அங்குள்ள அணு உலைகள் வெடித்து, கதிர்வீச்சு அபாயம் ஏற்பட்டுள்ளது. இதனால், ஜப்பான் மட்டுமில்லாமல், அந்நாட்டை ஒட்டியுள்ள இதர நாடுகளும், கதிர்வீச்சு பயத்தில் சிக்குண்டுள்ளன.

அணுமின் உற்பத்தியால் ஏற்பட்டுள்ள இடர்பாட்டை கருத்திற்கொண்டு, பல நாடுகள் தற்போது, மரபுசாரா எரிசக்தித் திட்டங்கள் வாயிலாக, மின் உற்பத்தி மேற்கொள்வதில் ஆர்வம் காட்டத் தொடங்கியுள்ளன.

இதுகுறித்து சர்வதேச நிலையான எரிசக்தி பயிலகத்தின் தலைமை இயக்குநர் ஜி.எம்.பிள்ளை கூறியதாவது -

அணுமின் உற்பத்தி குறித்து பல நாடுகள் எதிர்ப்புத் தெரிவித்து வந்த போதிலும், இந்த மின் உற்பத்திக்கு பல நாடுகள், அதிக முக்கியத்துவம் அளித்து வந்தன. தற்போது, ஜப்பானில் ஏற்பட்டுள்ள அணு உலை வெடிப்புச் சம்பவங்களால், உலக நாடுகள் மாற்று வழிகளில் மின் உற்பத்தி செய்வது குறித்துச் சிந்திக்கத் தொடங்கியுள்ளன.

அனல் மின் உற்பத்தித் திட்டங்களும், நிலக்கரி பற்றாக் குறையால், மின் உற்பத்தி இலக்கை எட்ட முடியாமல் உள்ளன. மேலும், நிலக்கரியின் விலை, தொடர்ந்து உயர்ந்து வருகிறது. இதன் இருப்பு நிலை எத்தனை காலத்திற்கு வரும் என்பதும் கேள்விக்குறியாகவே உள்ளது. அண்மைக்காலத்தில் இதன் விலை, 20 மடங்குக்கு மேல் உயர்ந்துள்ளது குறிப்பிடததக்கது.

இந்தியாவிலுள்ள அணு மின திட்டங்கள், மிகவும் பாதுகாப்பானது என்று கூறப்படுகிறது. ஆனால், சர்வதேச அளவில் மிகவும் பாதுகாப்பான முறையில் அணுமின் திட்டங்களை செயல்படுத்தி வந்த ஜப்பானின் நிலையே, மோசமான நிலைக்கு தள்ளப்பட்டுள்ளது.

தொழில்நுட்பத்தில் சிறந்து விளங்கும் ஜப்பான் நாடே, அணுமின் திட்டங்களால் அதிக இடர்பாட்டை கண்டுவரும் நிலையில், இத்திட்டம் இந்தியாவில் எந்த அளவிற்கு பாதுகாப்பானது என்பது புலப்படவில்லை.

மேற்கண்டவற்றை எல்லாம் வைத்துப் பார்க்கையில், அனைதது விதத்திலும் மரபுசாரா வகையில் மேற்கொள்ளப்படும் மின் திட்டங்களே மிகவும் பாதுகாப்பானது என்பதுடன், சுற்றுச் சூழலுக்கும் உகந்ததாகவுள்ளது.

கடந்த 10 ஆண்டுகளில், அணுமின் திட்டங்கள் வாயிலாக மேற்கொள்ளப்பட்ட மின் உற்பத்தி, 5,000 மெகாவாட் என்றளவில் தானுள்ளது. அதேசமயம், காற்றாலைகள் வாயிலான மின் உற்பத்தியின் பங்களிப்பு 10 ஆயிரம் மெகாவாட்டாக உள்ளது. இவ்வாறு பிள்ளை கூறினார்.

அணுமின் திட்டங்களுக்கான திட்டச் செலவு குறித்து, இதுவரை எந்தவிதமான புள்ளி விவரங்களும் வெளியிடப்பட்டதில்லை. இதற்கான செலவினங்கள் குறித்தும் தெரியாமலேயே உள்ளது. மரபுசாராத வகையில், பல்வேறு வகைகளில் நம்மால் மின்சாரத்தை உற்பத்தி செய்ய முடியும். குறிப்பாக, காற்றாலை திட்டங்கள் வாயிலாக, வரும் 2020ம் ஆண்டிற்குள், 50 ஜிகாவாட் அளவிற்கு மின் உற்பத்தி செய்ய முடியும்.



# குறள் சொல்லும் கதைகள் -33

இன்பத்துப் பால்

## மூங்கில் முத்துவேல்

குளக்கட்டின் வடக்குப் பக்கமாக மூங்கில் மரங்கள் பற்றையாக நின்றன. கவிஞர்கள் பெண்களின் தோளை மூங்கிலுக்கு ஒப்பிட்டு வர்ணிக்கிறார்கள். இந்த மூங்கில் மரத்தில் அப்படி என்ன விசேடமிருக்கு என்று மூங்கில் மரத்திற்கு மிக அருகில் சென்று பார்ப்பான். பலமணி நேரம் தொடர்ந்து பார்த்தும் அவனுக்கு அவற்றின் ஒத்த தன்மை பற்றி விளங்கவில்லை. இதற்குப் பற்றைக் காடாக வளர்ந்து நிற்கும் மூங்கில் மரங்களை உற்றுப் பார்த்தான். அதன் அருகில் சென்று தொட்டுப் பார்த்தான். பளபளவென இருந்த அதன் தோற்றம் அவனுக்குச் சற்று மயக்கத்தைக் கொடுத்தது.

வித்தியாவின் தோள்களை நினைத்துப் பார்த்தான். மூங்கில் மரத்தில் தொட்டபோது வித்தியாவின் தோள்களைத் தழுவுவது போன்ற உணர்வு அவனது மனதில் எழுந்தது. மென்மையான வளவளப்பான மஞ்சள் நிறங்கொண்ட அந்த மூங்கில் மரம் வித்தியாவின் தோள்களைப்போல பளபளத்தது.

குளக்கட்டில் அவனது தகப்பனார் நட்ட பயற்றங்கொடி கொம்பில் சுற்றி பச்சசைப்பசேல் என இருந்தது. அதன் தளிர் ஒன்று வயற்காற்றில் மெல்ல அசைந்து ஆடியது. மிருதுவான அந்தத் தளிரைப் போன்ற மெல்லிய வளைந்து அசையும் உடல்வாகு வித்தியாவுக்கு இருக்கிறதா என நினைத்துப் பார்த்தான் கஜேந்திரன். மிகவும் மெலிந்த அவளது பளபளப்பான உடல் காற்றில் அசையும் தளிர் போலத் தோன்றியது.

திரும்பிக் குளத்தைப் பார்த்தான். பூரணமாக மலர்ந்திருந்த பெரியதொரு செந்தாமரைப்பூ அவனின் கண்ணில்பட்டது. உற்று அதன் அழகை ரசித்தான். அந்தத் தாமரைப்பூ வித்தியாவின் பொலிந்த முகத்தைப் போல் இருந்தது. அவனைக் கண்டதும் அப்பூவில் தோன்றிய வித்தியா முறுவலித்தாள். வெண்முத்துக்களைப் போல அவளது பற்கள் ஒளிர்ந்தன. கைதேர்ந்த சிற்பி ஒருவனால் அளவெடுத்து செதுக்கியத்தைப் போன்ற அமைப்பு. வித்தியா பூரண மகிழ்வுடன் சிரித்தால் முத்துக்களைப் போல் ஒளிரும் அவளது பற்களைப் பார்த்துக் கொண்டே இருக்காலம். அவ்வளவு அழகான பற்கள்.

கஜேந்திரனின் மனவானில் வித்தியா வலம் வந்து மெல்லச் சிரித்தாள். சிரிக்கும்போது குழி விழும் அவளது மிருதுவான கன்னங்கள் சிவக்கும் அழகைக் கவிஞனைப் போல ரசிப்பான். அவளின் எழிலையும், அவள் அணிந்திருக்கும் சேலையின் அழகையும் ரசித்துக் கவிதைகள் எழுதிக்கொடுப்பான். அவள் 'விசர்' என்று சிரிப்பாள்.

கட்டி அணைக்கும் போது அவளது மிருதுவான உடலில் இருந்து வரும் வாசனை, அவனது மனதைச் சிலிர்க்கச் செய்யும். "பாண்டிய மகாதேவியின் கூந்தலில் இருந்து வந்த நறுமணம் செயற்கையானதா அல்லது இயற்கையானதா என்று பாண்டிய மன்னனுக்கு ஏற்பட்ட ஐயம் பெரும் கலவரத்தில் முடிவடைந்ததை ஒரு கணம் நினைத்துப் பார்த்தான் கஜேந்திரன். அவனுக்குச் சிரிப்பு வந்தது. "பெண்களின் அழகு கடவுளகள் மத்தியிலேயே குழப்பத்தை உண்டு பண்ணியுள்ளது. இதில் நான் எம் மாத்திரம்" என்று நினைத்துப் பார்த்தான்.

வித்தியாவின் மைதீட்டிய கண்களை நினைத்தப் பார்த்தான். வேலைப் போல் கூர்மையான அந்த விழிகள் கஜேந்திரனின் இதயத்தைத் தாக்கின. "பெண்களுக்குக் கண்கள் தான் அழகு என்று கவிஞர்கள் கூறுகிறார்கள். ஆண்களை வசியப்படுத்துவது அவர்களது கண்கள் தான்" என்று நினைத்தான் கஜேந்திரன்.


காதல் கொண்டவனுக்குக் காண்பதெல்லாம் காதலியின் கவர்ச்சியான அங்கங்களாகவே தோன்றும் என்று அவன் கேள்விப்பட்டிருக்கிறான். "கவிஞர்கள், புலவர்கள் எல்லோரும் பெண்களின் மென்மையான தோள்களைப் பற்றியும் உடலைப் பற்றியும், கண்களைப்பற்றியும் அளவுக்கதிகமாக வர்ணித்திருக்கிறார்கள். அவர்கள் கூறுவது எல்லாம் வித்தியாவுக்குப் பொருந்தும்" என்று நினைத்தான் கஜேந்திரன்.

**கே.வி.குணசேகரம்**

"முறிமேனி முத்தம் முறுவல் வெறிநாற்றம்
வேல்உன் கண் வேய்த்தோ ளவட்கு" (குறள் - 1113)

மூங்கில் போன்ற தோள்களை உடைய இவளின் மேனி தளிரையும், பற்கள் முத்தையும், உடல் மலரின் மணத்தையும், கண்கள் வேலையும் ஒத்திருக்கின்றன.

# ஜப்பானில் அணு உலை வெடிப்பால் பால்,குடிநீரில் கதிர்வீச்சுப் பாதிப்பு



(நசாகா)

ஜப்பானில் அணு உலை வெடித்ததால் பால் மற்றும் குடிநீரில் கதிர்வீச்சுப் பாதிப்பு ஏற்பட்டுள்ளதாக நிபுணர்கள் எச்சரிக்கை விடுத்துள்ளனர். ஜப்பானில் கடந்த வாரம் பயங்கர பூகம்பம் ஏற்பட்டது. அதைத் தொடர்ந்து சுனாமிப் பேரலைகள உருவாகி பலத்த சேதத்தை ஏற்படுத்தியது. இந்த இயற்கை பேரழிவுகளில் சிக்கி இதுவரை 18,600 பேர் பலியாகியுள்ளனர். அவர்களில் 7320 பேரின் உடல்கள் மீட்கப்பட்டுள்ளன. 11 ஆயிரத்து 330 பேரைக் காணவில்லை என அறிவிக்கப்பட்டுளளது.

சுனாமி தாக்கியதில் டோக்கியோவுக்கு வடகிழக்கில் உள்ள புகுஷிமாவில் உள்ள அணுமின் நிலையம் கடுமையாகப் பாதிக்கப்பட்டது. அதில் உள்ள 4 அணுஉலைகள் வெடித்தன. எனவே, அவற்றைக் குளிர்விக்கும் பணி நடந்து வருகிறது. இருந்தும் அதில் இருந்து அணு கதிர்வீச்சு வெளியேறி அப்பகுதியில் பரவி வருகிறது. புகுஷிமா அணு உலைப்பகுதியில் 30 கி.மீ. பரப்பளவில் வசிக்கும் பொது மக்கள் அங்கிருந்து அப்புறப்படுத்தபபட்டுள்ளனர்.

மேலும் அங்கு தங்கியிருப்பவர்களை வீட்டைவிட்டு வெளியேற வேண்டாம் என எச்சரிக்கப்பட்டுள்ளது. இதற்கிடையே டோக்கியோ நகரில் மக்கள் அன்றாடம் பயன்படுத்தும் உணவுப் பொருட்களிலும் அணுக் கதிர் வீச்சின் பாதிப்பு இருப்பது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. குறிப்பாக, குழாய் மூலம் விநியோகிக்கப்படும் குடிநீரில் கதிர்வீச்சு தாக்கம் இருப்பது தெரிய வந்துள்ளது.

இது புகுஷிமாவின் முதல் அணு உலை வெடித்ததில் இருந்து வெளியான கதிர்வீச்சு என நிபுணர்கள் கண்டறிந்துள்ளனர். கதிர்வீச்சு பாதித்துள்ள பால், கீரை, குடிநீர் போன்றவை எங்கிருந்து வருகிறது, அவை எப்படி விநியோகிக்கப்படுகிறது என்பதைக் கண்டறியும்படி சுகாதாரத்துறை அமைச்சரகம் உத்தரவிட்டுள்ளது.

முடிந்தவரை கதிர்வீச்சுப் பாதித்த உணவுப் பொருட்கள் பயன்படுத்துவதைத் தவிர்க்கும்படி பொதுமக்களை கேட்டுக் கொண்டுள்ளது. இதை, மக்களிடையே பரபரப்பை ஏற்படுத்தாமல் சாதாரண முறையில் விளக்கும்படி கேட்டுக்கொண்டுள்ளது. இந்தத் தகவலை சுகாதாரத்துறை அமைச்சகத்தின் செயதித் தொடர்பாளர் எடானோ தெரிவித்துள்ளார். டோக்கியோ நகருக்கு கவாமதா நகரில் உள்ள பண்ணைகளில் இருந்து தான் பால் கொண்டுவரப்படுகிறது. அதில் கதிர்வீச்சு உள்ளதா எனக் கண்டறிய பலத்த சோதனை நடத்தப்பட்டு அதன்பிறகே ஏற்றுமதி செய்ய அனுமதிக்கப்படுகிறது.

## அமெரிக்க தேவாலயத்தில் குர்ஆன் எரிப்பு

(வாஷிங்டன்)

அமெரிக்காவின் புளோரிடா மாகாணத்தில் உள்ள தேவாலயம் ஒன்றில் இஸ்லாமியர்களின் புனித நூலான குர் ஆன் எரிக்கப்பட்டதாக வெளியான தகவல் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

குர்ஆன் நூல் குற்றங்களின் தொகுப்பாக உள்ளதாகக் கூறி அதனை நேற்று எரித்துள்ளதாக அந்தத் தேவாலய வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

அமெரிக்காவின் சர்ச்சைக்குரிய கிறிஸ்தவ மதபோதகர் டெர்ரி ஜோன்ஸ் மேற்பார்வையில், தேவாலய பாஸ்டர்வேன் ஸாப் என்பவரால் குர் ஆன் கொளுத்தப்பட்டுள்ளது.

டெர்ரி ஜோன்ஸ் ஏற்கனவே கடந்த ஆண்டு, செப்டம்பர் 11 ஆம் திகதியன்று, தீவிரவாதிகள் 2001 ஆம் ஆண்டு நடத்திய இரட்டைக் கோபுர தாக்குதல் நினைவு தினத்தன்று குர்ஆனை எரிக்கப்போவதாகக் கூறி பரபரப்பை கிளப்பியது குறிப்பிடத்தக்கது.

## மாற்று சிறுநீரகம் பொருத்தியவர் எயிட்ஸ் நோய்த் தாக்கத்தால் பாதிப்பு



(வொஷிங்டன்)

சிறுநீரகம் பழுதடைந்தவர்களுக்கு மற்றொருவரிடம் இருந்து தானம் பெற்று அறுவை சிகிச்சை மூலம் மாற்று சிறுநீரகம் பொருத்தப்பட்டு வருகிறது. அதற்கு முன்பு தானம் வழங்குபவருக்கு எய்ட்ஸ் மற்றும் மஞ்சள் காமாலை உள்ளிட்ட நோய் உள்ளதா எனப் பரிசோதனை செய்யப்படுகிறது.

ஆனால், அமெரிக்காவில் நியூயோர்க் நகரில் மாற்று சிறுநீரகம் பொருத்தப்பட்ட ஒருவருக்கு எய்ட்ஸ் நோய் பாதிக்கப்பட்டுள்ளமை கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. அவருக்கு கடந்த 2009 ஆம் ஆண்டு ஓரினச் சேர்க்கையாளர் ஒருவரிடம் இருந்து சிறுநீரகம் தானம் பெறப்பட்டது.

அதைப் பொருத்துவதற்கு 11 வாரங்களுக்கு முன்னதாக தீவிர சோதனை நடத்தப்பட்டது. அதில் அந்த நபருக்கு எய்ட்ஸ் நோய் பாதிப்பு இல்லை எனத் தெரியவந்தது. அதன் பிறகுதான் சிறுநீரகம் பொருத்தப்பட்டது. இருந்தும் சிறுநீரகம் தானம் பெற்றவருக்கு எய்ட்ஸ் நோய் பாதித்தது எப்படி என பரிசோதனை நடத்தப்பட்டது.

அதில், பரிசோதனைக்குப் பிறகு சிறுநீரகம் தானம் கொடுத்த ஓரின சேர்க்கையாளரின் தகாத செக்ஸ் உறவு மூலம் எய்ட்ஸ் நோய் அவரைத் தாக்கி இருக்கலாம் எனத் தெரியவந்தது.

எனவே, சிறுநீரகம் தானம் செய்பவர்களும் பாதுகாப்பான செக்ஸ் உறவில் ஈடுபடும்படி அமெரிக்க நோய்த் தடுப்பு மற்றும் பாதுகாப்பு மையம் தெரிவித்துள்ளது.

## தாய்வானில் நிலநடுக்கம்

(தைபே)

தாய்வான் நாட்டின் வடமேற்குப் பகுதியில் உள்ள டைடுங் பகுதியில் நிலநடுக்கம் ஏற்பட்டது. ரிக்டர் அளவு கோலில் இவை 5.5 என்ற அளவில் பதிவானது.இதனால் அப்பகுதியில் இருந்த கட்டடங்களில் அதிர்வு ஏற்பட்டது. இருப்பினும் சுனாமி அபாயம் எதுவும் இல்லை என புவியியல் வல்லுநர்கள் தெரிவித்துள்ளனர். நிலநடுக்கம் ஏற்படக்கூடிய கண்டத்திட்டு பகுதியில் தாய்வான் நாடு அமைந்திருப்பது குறிப்பிடத்தக்கது. மேலும் கடந்த 1999இல் இப்பகுதியில் 7.6 என்ற ரிக்டர் அளவில் ஏற்பட்ட நிலநடுக்கத்தால் சுமார் 2ஆயிரத்து 400இற்கும் மேற்பட்டோர் பலியாகினர் என்பது குறிப்பிடத்தக்கது.

# பாகிஸ்தான் சுரங்க விபத்தில் 21 பேர் உயிரிழப்பு எனத் தகவல்



(இஸ்லாமாபாத்)

பாகிஸ்தானில் ஏற்பட்ட சுரங்க வெடிவிபத்தில் சிக்கி 21 பேர் பலியாகினர்.

மேலும் சுரங்கத்தில் சிக்கிக் கொண்ட 30 பேரை மீட்க மீட்பு பணியாளர்கள் போராடி வருகின்றனர். தென்மேற்கு பாகிஸ்தான் பகுதியில் குவெட்டாவுக்கு 30 கிலோமீற்றர் தொலைவில் சோரங் பகுதியில் பழமையான சுரங்கம் உள்ளது.

சுரங்கத்தைப் பாகிஸ்தான் கனிம வள மேம்பாட்டுக் கழகம் நடத்தி வருகிறது. இந்தச் சுரங்கத்தில் நேற்றுமுன்தினம் திடீரென வெடிவிபத்து ஏற்பட்டது.

இந்த வெடிவிபத்தில் 21 பேர் பலியாகிவிட்டனர்.

மேலும் சுரங்கத்தில் வேலை செய்துகொண்டிருந்த 30 பேரின்கதி என்ன வென்று தெரியவில்லை. அவர்கள் இறந்துவிட்டார்களா அல்லது சுரங்கத்தின் மற்றொரு பகுதியில் சிக்கிக் கொண்டார்களா என்பது தெரியவில்லை.

பலியான 5 பேரின் உடல்கள் மீட்கப்பட்டுள்ளதாக அதிகாரிகள் தெரிவித்தனர்.

12 பேர் நினைவிழந்த நிலையில் மீட்கப்பட்டனர். அவர்கள் அருகிலுள்ள மருத்துவமனையில் சிகிச்சைக்காகச் சேர்க்கப்பட்டுள்ளனர். மாயமாகியுள்ள 30 பேரையும் மீட்க மீட்புப்படை வீரர்கள் தீவிர முயற்சி மேற்கொண்டு வருகின்றனர்.

# வடக்கில் ஆடை உற்பத்தி தொழில்துறை முதலிடவிரும்பும் நிறுவனங்களுக்கு அனுமதி

முதலீடுகள் மேற்கொள்ளப்படுவது தொடர்பில் கவனம் செலுத்தும் புதிய சட்ட மூலம் கொண்டுவரப்படவிருக்கும் நிலையில், அதற்கு முன்னரே வடக்கில் ஆடை உற்பத்தித் துறையில் முதலிட விரும்பும் நிறுவனங்களுக்கான திட்டங்களுக்கு அனுமதி வழங்குவதில் இலங்கையினது முதலீட்டுச் சபை [Board of Investment - BOI] மும்முரமாக ஈடுபட்டு வருகிறது.

புதிய தொழிற்சாலைகளை நிறுவும் ஆடை உற்பத்தி நிறுவனங்களின் வேண்டுகைகளுக்கான அனுமதியளிப்பதை இலங்கை முதலீட்டுச்சபை வேண்டுமென்றே இழுத்தடிக்கிறது என்றும், இதனால் பல பில்லியன் பெறுமதியான வருமானத்தினை இலங்கை இழப்பதாகவும் முன்னர் குற்றம் சுமத்தப்பட்டிருந்தது.

இந்த நிலையிலேயே இந்த வேண்டுகைகளுக்கு வேகமான நடவடிக்கைகளை எடுப்பது என்ற முடிவினை முதலீட்டுச் சபை எடுத்திருக்கிறது.

நாட்டினது வடக்குப் பகுதியில் தங்களது உற்பத்தித் தொழிற்சாலைகளை நிறுவும் வகையில் தானும் இன்னமும் நாட்டினது எட்டு முன்னணி ஆடை உற்பத்தி நிறுவனங்களும் இணைந்து முதலீட்டுச் சபையுடன் பேச்சுக்களை நடாத்தியதன் விளைவாகவே இதுபோன்றதொரு சாதகமான நிலைமை ஏற்பட்டிருப்பதாக ஏப்பறல்ஸ் லங்கா [Orit Apparels Lanka] என்ற ஆடை உற்பத்தி நிறுவனத்தின் நிறைவேற்றுப் பணிப்பாளர் சானா பாலசூரிய கூறுகிறார். போரினால் பாதிக்கப்பட்ட வடக்குப் பகுதியில் இதுபோல பல மில்லியன் ரூபா பெறுமதியான முதலீடுகளைச் செய்வதானது அந்தப் பிராந்தியம் செழிப்படைவதற்கு வழிசெய்யும்.

பிறன்டிக்ஸ் லிமிற்றட், கிர்டாறமணி லிமிற்றட், ரைம்ஸ் எக்ஸ் காமன்ஸ் லிமிற்றட், எம்.எம்.எஸ் கோல்டிங்ஸ் மற்றும் ஒமேகா லைன் லிமிற்றட் [Brandix Limited,Hirdaramani Limited, Timex Garments Limited, MAS Holdings and Omega Line Limited] ஆகியன வடக்கில் முதலிட விரும்பும் ஆடை உற்பத்தி நிறுவனங்களில் முதன்மையானவையாகும்.

"ஒன்பது ஆடை உற்பத்தி நிறுவனங்கள் வடக்கில் முதலீடுகளை மேற்கொள்வதற்கு ஆர்வத்துடன் இருப்பதாக முதலீட்டுச்சபை கூறுகிறது. ஆடை உற்பத்தி நிறுவனங்களின் கூட்டமைப்பு ஊக்கமளிக்கும் சிறந்த பலனைத் தரவல்ல சம்பவம் இது. வடக்கில் ஆரம்பிக்கப்படவுள்ள இந்தத் தொழிற்சாலைகளில் உள்ளூர் தொழில் வல்லுநர்களுக்கு வேலை வாய்ப்பு வழங்கப்படுவதானது போரினால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் பொருளாதாரம் மேன்மையடைவதற்கு வழிசெய்யும். கடந்த காலங்களில் தேவையற்ற தாமதங்கள் இருந்த போதிலும் வடக்கில் தொழிற்



சாலைகளை நிறுவுவதற்கான எங்களது வேண்டுகைகள் தொடர்பில் முதலீட்டுச் சபை இதுபோல துரிதமாகச் செயலாற்றுவது மகிழ்வினைத் தருகிறது" என பாலசூரிய கூறுகிறார்.

மார்ச் 31ஆம் நாளுக்கு முன்னர் தாங்கள் சமர்ப்பித்த திட்டங்களுக்கு அனுமதி வழங்குவதற்கு முதலீட்டுச் சபை ஆர்வத்துடன் இருப்பதாக இவர் மேலும் கூறினார். 12 மில்லியன் அமெரிக்க டொலர் பெறுமதியான திட்டமொன்றில் கடந்த ஆறு மாதங்களுக்கு மேலாகத் தங்களது நிறுவனம் முதலிட்டிருப்பதாக பாலசூரிய தொடர்ந்து கூறினார்.

வவுனியாப் பகுதியில் தனது ஆடை உற்பத்தித் தொழிற்சாலை ஒன்றை அமைப்பதற்கு ஒறிற் லங்கா நிறுவனம் விருப்பம் தெரிவித்திருக்கிறது. வடக்கில் தங்களது தொழிற்சாலைகளை அமைக்க விரும்பிய சிறிலங்காவின் முன்னணி ஆடை உற்பத்தி நிறுவனங்களின் பிரதிநிதிகள் கடந்த 28 ஒக்ரோபர் 2010 அன்று வவுனியாவிற்கு பயணம் செய்து வட மாகாண ஆளுநர் ஜீ.ஏ சந்திரசிறியைச் சந்தித்திருந்தனர். ஆடை உற்பத்தித் தொழிற்சாலைகளை நிறுவுவதற்கான பிரதேசங்களாக ஓமந்தை, நெழுக்குளம் மற்றும் செட்டிகுளம் பகுதிகள் முன்மொழியப்பட்டிருக்கின்றன.

ரைம் எக்ஸ் மற்றும் பிறக்ஸ்சம் ஆகிய நிறுவனங்கள் 1.5 பில்லியன் பெறுமதியான தொழிற்சாலைகளை நிர்மாணிப்பதற்குத் திட்டமிட்டிருப்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

---

# இரண்டு இலட்சம் இளைஞர்களுக்கு தொழிற்பயிற்சி வழங்கப்படவுள்ளது


## அமைச்சர் டலஸ் அழகப்பெரும தெரிவிப்பு

(கொழும்பு)

எதிர்வரும் 2014ஆம் ஆண்டிற்கு முன்னர் இரண்டு இலட்சம் இளைஞர்களுக்கு தொழில்சார் மற்றும் தொழில்நுட்பவியல் பயிற்சிகள் வழங்கப்படவுள்ளதாக இளைஞர் சேவைகள் அமைச்சர் டலஸ் அழகப்பெரும தெரிவித்தார்.

டிக்வெலவில் 37ஆவது இளைஞர் சேவைகள் மன்ற அலுவலகத்தைத் திறந்து வைத்து உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது,

நான் பதவியேற்று கடந்த 11 மாதத்தில் இளைஞர் சேவைகள் அமைச்சு முன்னேற்றம் கண்டுள்ளது. ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் பிரதான இலக்கு இலங்கையை



புதிதாகக் கட்டியெழுப்புவதாகும். இதற்கு முழுமையாக புலிகளைத் தோற்கடிக்க வேண்டும் என்று எமது வீரம் செறிந்த படையினர் ஜனாதிபதியின் வழிகாட்டுதலில் அதனைச் செய்து முடித்தனர்.

வருடாந்தம் 3 இலட்சத்து நாற்பதாயிரம் பேர் உயர்தர பரீட்சைக்குத் தோற்றுகின்றனர். எனினும் இவர்களில் 21ஆயிரம் பேரே பல்கலைக்குத் தகுதி பெறுகின்றனர். எனவே மிகுதியாக உள்ள மாணவர்களுக்கு எனது அமைச்சின் கீழ் தொழிற்பயிற்சிகள் அளிக்கப்படவுள்ளது. இதற்காக பல்கலைக்கழகத்திற்காக தகுதி பெற்ற ஆயிரத்து 200பேர் தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்திற்கு இவ்வருடம் சேர்த்துக் கொள்ளப்படவுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

---

# லிபியா விடயத்தில் மேற்குநாடுகள் இரட்டைவேடமெனக் குற்றச்சாட்டு

(கொழும்பு)

லிபியா விடயத்தில் மேற்குலக நாடுகள் கடைபிடிக்கும் இரட்டை வேடத்தை மக்கள் விடுதலை முன்னணி கடுமையாகக் கண்டித்துள்ளது.

ஜனநாயகம் பற்றிக் கதைக்கும் மேற்குலக நாடுகள் லிபியாவிற்கு எதிராகத் தாக்குதல் மேற்கொள்கின்றமை ஏற்க முடியாத விடயமென மக்கள் விடுதலை முன்னணி அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளது.

இதேவேளை, லிபியா - திரிபோலி நகரத்தில் நடத்தப்பட்ட எறிகணைத் தாக்குதல் ஒன்றில் அந்நாட்டுத் தலைவர் கேர்ணல் கடாபியின் கட்டடம் இடிந்து சேதமடைந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

எனினும் இந்தக் கட்டடத்தின் மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதலால் ஏற்பட்ட சேத விபரங்கள் குறித்து தகவல்கள் எதுவும் இதுவரை வெளியிடப்படவில்லை.

லிபியத் தலைவர் க்டாபி -யின் படைகளுக்கு எதிராக அமெரிக்கா,பிரான்ஸ், பிரித்தானியா, இத்தாலி உள்ளிட்ட நாடுகள் தாக்குதல் மேற்கொண்டு வருவதுடன் அரபு நாடான கட்டாரும் லிபியாவிற்கு எதிரான தாக்குதலில் பங்குகொள்ள விருப்பம் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக் கது.

---

# குவைத்தில் சட்டவிரோதமாக தங்கியுள்ளவர்களில் 5000 பேர் அவசரகால சான்றிதழுக்கு விண்ணப்பம்

(கொழும்பு)

சட்டவிரோதமான முறையில் தங்கியுள்ள வெளிநாட்டவர்கள் தமது நாட்டிலிருந்து வெளியேறும் வகையில் குவைத் அரசு வழங்கியுள்ள நான்குமாத பொதுமன்னிப்புக் காலத்தைப் பயன்படுத்தி இதுவரை சுமார் ஐயாயிரம் இலங்கையர்கள் அவசரகால சான்றிதழ் பெறுவதற்காக இலங்கைத் தூதரகத்திற்கு விண்ணப்பித்துள்ளதாக வெளிவிவகார அமைச்சுத் தெரிவித்தது.

இவ்வாறு அவசரகால சான்றிதழ் பெறவிண்ணப்பித்தவர்களில் மூவாயிரம் பேருக்கு அதுவழங்கப்பட்டுள்ளது. குவைத்தில் பத்தாயிரம் வரையான இலங்கையர்கள் சட்டவிரோதமாக உள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

சட்டவிரோதமாக தங்கியுள்ள அனைத்து இலங்கையர்களும் நாட்டிற்கு உடனடியாகத் திருபபி அனுப்பப்படமாட்டார்கள். தமது பயணத்தின் நிமித்தம் தாம் கொண்டு செல்வதற்காகவே இந்த மக்கள் அவசர கால சான்றிதழைப் பெற விண்ணப்பிக்கின்றனர். குவைத் அரசாங்கம் கடுமையான சட்ட விதிகளை இவர்கள் மீது பயன்படுத்தமாட்டாதெனவும் வெளிவிவகார அமைச்சுத் தெரிவித்தது.

இதேவேளை லிபியாவில் தங்கியிருந்த இலங்கையர்களில் தொண்ணூறு வீதமானவர்கள் நாட்டிற்கு அழைத்து வரப்பட்டுள்ளதாகவும் குறைந்தளவானோர் அங்கு தங்கியிருக்க விரும்புவதாகவும் எனினும் அவர்களும் நாடு திரும்ப விரும்பினால் அவர்களுக்கான உதவிகள் செய்யப்படுமெனவும் வெளிவிவகார அமைச்சு மேலும் தெரிவித்தது.

---

# சூடானில் நாடுகடந்த தமிழீழ அரசின் தூதரகம் இலங்கை அரசாங்கம் அசமந்தப் போக்கு

## கண்டிக்கிறார் ஷானக்க ஜயசேகர

(கொழும்பு)

நாடுகடந்த தமிழீழ அரசு தென் சூடானில் தனது தூதரகத்தைத் திறக்க இருப்பது குறித்து இலங்கை அசமந்தப் போக்கைக் கடைப்பிடிப்பதாக ஷானக்க ஜயசேகர தெரிவித்துள்ளார். இலங்கையின் பயங்கரவாத ஒழிப்பு மற்றும் பயங்கரவாத கற்கைநெறிகளுக்கான அமைப்பின் தலைவர்களில் ஒருவரான ஷானக்க ஜயசேகர மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

நாடுகடந்த அரசானது தனது தூதரகத்தை தென் சூடானில் திறப்பதால் அவர்களுக்கான ஒரு அங்கீகாரம் கிடைக்கவிருப்பதாகவும், இலங்கை அதனை உடனடியாகத் தடுக்க வேண்டும் எனவும் அவர் கூறியுள்ளதோடு இலங்கை மீண்டும் கடுமையாக எதிர்த்தாக்குதல்களைத் தொடுக்கவேண்டும் என வெளிப்படையாகத் தெரிவித்துள்ளார்.

புலிகளின் உப அமைப்புகளில் நாடுகடந்த அரசு ஒன்று என வர்ணித்துள்ள அவர் சுவிஸ், பிரித்தானியா, நோர்வே மற்றும் கனடா ஆகிய நாடுகளில் இந்த அமைப்புகள் செயற்பட்டுவருகிறது என்றும் கடந்த சில காலமாக அதன் செயற்பாடுகள் பல மடங்கு அதிகரித்துள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார். இந் நிலை தொடர்ந்தால் இலங்கை அரசுக்கு அபகீர்த்தி ஏற்படுவதோடு, சர்வதேச அழுத்தங்களும் பன்மடங்கு அதிகரிக்கும் நிலை தோன்றலாம் என்று எச்சரித்துள்ளார் எனவும் அவர் தெரிவித்தார்.

---

# வணிகபீட நடவடிக்கைகள் 24ஆம் திகதி ஆரம்பம்

(கொழும்பு)

சப்ரகமுவ பல்கலைக்கழகத்தின் வணிகபீட கல்வி நடவடிக்கைகள் எதிர்வரும் 24ஆம் திகதி ஆரம்பிக்கப்படவுள்ளன.

குறித்த பீட மாணவர்கள் இன்றிலிருந்து விடுதிகளுக்கு சமூகமளிக்க முடியுமென சப்ரகமுவ பல்கலைக்கழகத்தின் உபவேந்தர் பேராசிரியர் மஹிந்த ரூபசிங்க தெரிவித்தார்.

அத்துடன் ஏனைய பீடங்களின் கல்வி நடவடிக்கைகளை ஆரம்பிப்பது குறித்து விரைவில் அறிவிக்கப்படுமென அவர் குறிப்பிட்டார்.

சப்ரகமுவ பல்கலைக்கழக மாணவர்களின் ஆர்ப்பாட்டம் காரணமாக கடந்த 11ஆம் திகதியிலிருந்து காலவரையறையின்றி பல்கலைக்கழகம் மூடப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# நுரைச்சோலை அனல் மின் நிலையம்; ஜனாதிபதி இன்று ஆரம்பித்து வைக்கிறார்



(புத்தளம்)

புத்தளம் நுரைச்சோலையில் அமைக்கப்பட்டுள்ள அனல் மின் நிலையத்தின் முதல்கட்ட நடவடிக்கைகள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவினால் இன்று ஆரம்பித்து வைக்கப்படவுள்ளது.

நிலக்கரியைக் கொண்டு இலங்கையில் மின்சாரம் தயாரிக்கவுள்ள முதலாவது செயற்திட்டம் இதுவென்பது குறிப்பிடத்தக்கது. இதன் முதற்கட்டத்தின் ஊடாக 300 மெகாவொட் மற்றும் இரண்டாம் கட்டத்தின் ஊடாக 600 மெகாவொட் மின்சாரமும் தேசிய மின்வலுக்கட்டமைப்புக்கு வழங்கப்படவுள்ளது.

அதற்கேற்ப 2014ஆம் ஆண்டில் 900 மெகாவொட் மின்னுற்பத்தியை அடையும் இலக்கு நுரைச்சோலை அனல் மின் நிலையத்துக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

ஆரம்பத்தில் திருகோணமலை மற்றும் அம்பாந்தோட்டை ஆகிய மாவட்டங்களில் ஆரம்பிக்கப்படவிருந்த அனல் மின் நிலையம், எதிர்ப்புக்கள் காரணமாக புத்தளத்தில் நிர்மாணிக்கப்பட்டுள்ளது.

இதன் நிர்மாணப் பணிகளுக்கென சீன அரசாங்கம் 455 மில்லியன் அமெரிக்க டொலர்களை கடனாக வழங்கியுள்ளதுடன், இலங்கை அரசாங்கம் 5,300 மில்லியன் ரூபாவினை செலவிட்டுள்ளது.

# நாடாளுமன்ற கட்டடத் தொகுதிக்கு ஜனாதிபதி நேற்று திடீர் விஜயம்

(கொழும்பு)

ஜனாதிபதி மகிந்தராஜபக்ஷ நேற்றைய தினம் நாடாளுமன்ற கட்டடத் தொகுதிக்கான திடீர் விஜயம் ஒன்றை மேற்கொண்டார்.

அமைச்சுக்களின் ஆலோசனைக் குழுக் கூட்டத்தில் கலந்து கொள்ளும் பொருட்டு அவர் அங்கு சென்றதாகத் தெரிவிக்கப்படுகிறது.

பாதுகாப்பு, நிதி, துறைமுக மற்றும் பெருந்தெருக்கள் அமைச்சுக்களின் ஆலோசனைக் குழு கூட்டம் நேற்று நடைபெற்றது.

இதற்கிடையில் கொழும்புக்கும் ஜப்பானுக்கும் இடையிலான விமான சேவையைத் தொடர்ந்தும் நடத்திச் செல்லுமாறு, சிறிலங்கன் எயார்லைன்ஸுக்கு ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ அறிவுறுத்தியுள்ளார்.

ஜப்பானில் ஏற்பட்ட அனர்த்தங்களைத் தொடர்ந்து, அந்த நாட்டுக்கான விமான சேவைகளைப் பல நாடுகள் தற்காலிகமாக இடைநிறுத்தத் தீர்மானித்துள்ளதாகக் கூறப்படுகிறது.

எனினும், இலங்கைக்கும்-ஜப்பானுக்கும் இடையிலான உறவு மேலும் விருத்தி அடையும் வகையில், இந்த விமான சேவைகளைத் தொடர்ந்தும் நடத்துமாறு அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

# அக்கரைப்பற்று மாநகர முதல்வராக அமைச்சர் அதாவுல்லாவின் புதல்வன்

(அக்கரைப்பற்று)

அக்கரைப்பற்று மாநகர சபையின் முதல், முதல் வராக உள்ளூராட்சி மாகாண சபைகள் அமைச்சர் ஏ.எல்.எம். அதாவுல்லாவின் புதல்வரான சக்கி அதாவுல்லா நியமிக்கப்படவுள்ளதாக நம்பத்தகுந்த வட்டாரங்கள் தெரிவித்தன.

அமைச்சர் அதாவுல்லா தலைமையிலான தேசிய காங்கிரஸ் சார்பாக அக்கரைப்பற்று மாநகர சபைக்கான தேர்தலில் போட்டியிட்ட சக்கி அதாவுல்லா 7,900க்கு மேற்பட்ட அதிகூடிய வாக்குகளைப் பெற்றார்.

தற்போது சக்கி அதாவுல்லா, உள்ளூராட்சி மாகாண சபைகள் அமைச்சர் ஏ.எல்.எம். அதாவுல்லாவின் அந்தரங்கச் செயலாளராகச் செயற்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை, இரண்டாவது அதிகூடிய வாக்குகளைப் பெற்ற முஹம்மட் றிஸான், பிரதி முதல்வராக நியமிக்கப்படலாம் எனத் தேசிய காங்கிரஸ் வட்டாரங்கள் தெரிவித்தன.

அக்கரைப்பற்றுப் பிரதேச சபையின் முன்னாள் தவிசாளர் முஹம்மட் தவம் மற்றும் பிரதி தவிசாளர் முஹம்மட் சபீஸ் ஆகியோர் அக்கரைப்பற்று மாநகரசபைத் தேர்தலில் 4,000க்கு மேற்பட்ட வாக்குகளைப் பெற்று முறையே 3ஆம் மற்றும் 4ஆம் இடங்களில் தெரிவுசெய்யப்பட்டுள்ளனர்.

அக்கரைப்பற்றுப் பிரதேச சபை- மாநகர சபையாகக் கடந்த ஜனவரி மாதம் உள்ளூராட்சி மாகாண சபைகள் அமைச்சினால் தரமுயர்த்தப்பட்டமை இங்கு குறிப்பிடத்தக்கது.

# கிறிஸ்மஸ் தீவில் வன்முறை; மேலும் பலமடைகிறது பாதுகாப்பு

அவுஸ்திரேலிய-கிறிஸ்மஸ் தீவில் தங்கவைக்கப்பட்டு அகதி அந்தஸ்து கோருவோர் நேற்று முன்தினம் பாதுகாப்புத் தரப்பினரையும், கட்டடங்களையும் தாக்கியுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதுதவிர, நலன்புரி முகாமில் உள்ள சில கட்டடங்களுக்கும், உடைமைகளுக்கும் அவர்கள் தீ வைத்துள்ளதாகவும்,

அகதி அந்தஸ்து கோருவோர் சிலர் கடந்த 2 வருடங்களாக, தமக்கு வழங்கப்பட்டுள்ள இருப்பிட வசதிகள் போதுமானதாக இல்லை எனத் தெரிவித்துப் போராட்டங்களை முன்னெடுத்து வருகின்றனர்.

இதுதவிர, தமது அகதி அந்தஸ்து கோரும் விண்ணப்பங்களை ஆராயும் நடவடிக்கைகளும் தாமதமாக இடம்பெறுவதாகவும் அவர்கள் குற்றம் சுமத்தியுள்ளனர்.

கிறிஸ்மஸ் தீவில் உள்ள நலன்புரி முகாம்களில் இலங்கை, ஆப்கானிஸ்தான் மற்றும் ஈராக் நாடுகளைச் சேர்ந்த அகதி அந்தஸ்து கோருவோர் பெருமளவில் உள்ளனர்.

அவுஸ்திரேலியாவின் வட மேற்குத் திசையில் உள்ள கிறிஸ்மஸ் தீவில் சுமார் 2 ஆயிரத்து 500 அகதி அந்தஸ்து கோருவோர் தங்கவைக்கப்பட்டுள்ளனர்.

முகாமில் உள்ள உடைமைகள் சேதமாக்கப்பட்ட சம்பவத்தை வன்மையாகக் கண்டித்துள்ள அவுஸ்திரேலிய வெளிவிவகார அமைச்சர் கெவின ரட், எதிர்வரும் நாட்களில் இவ்வாறான சம்பவங்கள் இடம்பெறுவதைத் தடுக்க நடவடிக்கை எடுக்கவுள்ளதாகக் குறிப்பிட்டுள்ளார்.

சம்பவத்தை அடுத்து தீவின் பாதுகாப்புப் பலப்படுத்தப்பட்டுள்ளதாக குடிவரவு, குடியகல்வுத் திணைக்கள அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

## பேச்சுவார்த்தையில் இந்திய....

இராஜாங்கத் திணைக்களத்துக்கு தகவல் குறிப்பு ஒன்று அனுப்பப்பட்டிருந்தது. இலங்கையின் சமாதான முயற்சிகள் பாதிக்கப்பட்டுள்ளதாகவும், முன்னொருபோதும் இல்லாத வகையில் எதிர்வுகூற முடியாதவராக புலிகளின் தலைவர் பிரபாகரன் இருப்பதாகவும் இத் தகவல் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன், இச் சமாதான முயற்சிகள் தொடர்பில் நோர்வே தனது கட்டுப்பாட்டை இழந்துவிட்டதாக புதுடில்லியிலுள்ள அமெரிக்கத் தூதரக அதிகாரிகளுக்கு இந்திய வெளிவிவகார அமைச்சின் பிரதிச் செயலாளர் அனுபம் ராய் கூறியுள்ளதாகவும் இத் தகவற் குறிப்பில் தெரிவிக்கப்பட்டிருந்தது.

இலங்கையின் விவகாரத்தில் இந்தியா மீண்டும் தலையிடுவதற்கான நேரம் வருவதாக அனுபம் ராய் கூறியிருந்தார். அதேவேளை, மத்தியஸ்தராகவோ, அனுசரணையாளராகவோ விளங்குவதற்கு இந்தியா விரும்பவில்லை எனவும் நோர்வே, ஜப்பான், அமெரிக்கா, ஐரோப்பிய ஒன்றியம் ஆகிய இணைத் தலைமைகள் குழுவிலும் இந்தியா இணைந்து கொள்ளமாட்டாதென அனுபம் ராய் தெளிவாகத் தெரிவித்திருந்தார்.

2003ஆம் ஆண்டு டோக்கியோவில் இடம்பெற்ற இலங்கைக்கு உதவி வழங்கும் நாடுகள் மாநாட்டுக்கு இணைத் தலைமை நாடுகளே தலைமை வகித்திருந்த போதிலும், இந்த உதவி வழங்கும் நாடுகளின் குழுவில் அதிகளவில் பங்களிப்பு வழங்க இந்தியா விரும்பியதாகக் கூறப்பட்டுள்ளது.

இந்நிலையில் மகிந்த ராஜபக்ஷ ஜனாதிபதியாகத் தெரிவு செய்யப்பட்டதைத் தொடர்ந்து அமெரிக்க தூதரக அதிகாரிகளுக்கு இந்திய வெளிவிவகார அமைச்சின் இணைச் செயலாளர் மோகன் குமார் ஒரு வியடத்தைக் கூறியிருந்தார். அதாவது, இலங்கையின் சமாதான முயற்சிகள் ஸ்தம்பிதமடைந்திருப்பதுடன், அது மேலும் பின்னடைவைக் காணும் தன்மையைக் கொண்டிருக்கின்ற காரணத்தால் இந்திய அரசாங்கம் இனிமேலும் அமைதியாக இருக்க முடியாது என்பதே அதுவாகும்.

2005ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 23ஆம் திகதி அமெரிக்க இராஜாங்கத் திணைக்களத்திற்கு அனுப்பப்பட்ட தகவல் குறிப்பில் இவ் விவகாரம் தெரிவிக்கப்பட்டுள்ளதாக ஹிந்துப் பத்திரிகை தெரிவித்துள்ளது.

## மன்னாரில் கடல் ....

நேற்றைய தினம் தொழிலுக்குச் சென்ற மீனவர்கள் உடன் கரை திரும்பியுள்ளனர்.

குறிப்பாக, மன்னார், பேசாலை நடுக்குடா கடற்பரப்பு மற்றும் தலைமன்னார் பழைய பாலத்தடி கடற்பரப்பு போன்ற கடற்கரை பகுதிகளில் கடல் நீர் உட்புகுந்துள்ளது.

இதனால், பழைய பாலத்தடியில் குடும்பமாகத் தங்கியி ருந்து மீன்பிடியில் ஈடுபடும் 40 தென்பகுதி மீனவக் குடும்பங்கள் இடம் பெயர்ந்துள்ளன.

## கூட்டுப்படைகளின்.....

மேற்குலகக் கூட்டுப்படை அதி காரிகள் உறுதிப்படுத்தியுள்ளனர். கேணல் கடாபியைத் தாம் இலக்கு வைக்கவில்லை எனவும், அவருக்கு ஆதரவான படைத்தரப்பினரையும், வான் பாதுகாப்புக் கட்டமைப்பையுமே தாம் இலக்கு வைத்ததாகவும் அமெரிக்க அதிகாரி ஒருவர் குறிப்பிட்டுள்ளார்.

ஐக்கிய நாடுகள் சபை பாதுகாப்புப் பேரவையின் தீர்மானத்தின்படி லிபியா மீது விதிக்கப்பட்ட விமான பறப்புத் தடை வலயத்தை உறுதிப்படுத்தும் முகமாக அமெரிக்கா, பிரித்தானியா மற்றும் பிரான்ஸ் ஆகிய நாடுகள் லிபியா மீது படை நடவடிக்கையை மேற்கொண்டு வருகின்றன. அமெரிக்கா தலைமையிலான இத் தாக்குதல் நடவடிக்கைக்கு இந்தியா உட்பட சர்வதேச ரீதியாகக் கடும் கண்டனம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

திரிபோலியைச் சுற்றிலும் லிபிய ஜனாதிபதி கேணல் கடாபியின் ஆதரவுப் படையினர் வைத்துள்ள ரேடர்கள், ஏவுகணைகள் மற்றும் தகவல் தொடர்பு மையங்களைக் குறி வைத்து டோமஹாக் ஏவுகணைகளைக் கொண்டு அமெரிக்கா நேற்று முன்தினம் கடும் தாக்குதல்களை மேற்கொண்டிருந்தது.

இந்தத் தாக்குதலுக்கு லிபிய நாடாளுமன்றத்தின் சபாநாயகர் முகம்மது சுவேத் கடும் கண்டனம் தெரிவித்துள்ளார். அமெரிக்காவின் இந் நடவடிக்கையானது காட்டுமிராண்டித்தனமான அத்துமீறிய தாக்குதல் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

இந்த விமானத் தாக்குதலில் எத்தனை பேர் உயிரிழந்தார்கள் என இதுவரை முழுமையாகத் தெரியவராத போதிலும், 64 பேர் வரையில் உயிரிழந்துள்ளதாகவும், நூற்றுக்கணக்கானோர் காயமடைந்துள்ளதாகவும் தெரிய வருகின்றது.

## அரியாலை கிழக்கு.....

யாழ். மாநகர முதல்வர் திருமதி யோகேஸ்வரி பற்குணராஜாவைத் தொடர்பு கொண் டதற்கிணங்க அரியாலை கிழக்கு மக்களுக்கான பஸ் சேவையினை ஏற்பாடு செய்திருந்தார்.

தினமும் காலை 6.30, நண் பகல் 12.00, பிற்பகல் 2.00 மணி ஆகிய நேரங்களில் இப் பஸ்சேவை இடம்பெறவுள்ளது. இச் சேவையினைத் தமது தேவையறிந்து ஏற்பாடு செய்து கொடுத் தமைக்காக அப்பகுதி மக்கள் நன்றி தெரிவித்துள்ளனர்.

பேருந்துச் சேவையினை ஆரம்பிக்கும் நிகழ்வில் மாநகர முதலர்வர் யோகேஸ்வரி பற்குணராஜா, ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் யாழ். மாவட்ட அமைப்பாளர் கந்தசாமி கமலேந்திரன் (கமல்), நல்லூர் பிரதேச அமைப்பாளர் அ.ரவீந்திரதாசன் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர். (மி)

## வடபகுதி மீனவர்......

கொழும்பிலுள்ள அமைச்சரின் அலுவலகத்தில் நேற்று இரவு நடைபெற்ற இந்த சந்திப்பின் போது தமது கடல் எல்லைக்குள் இந்திய மீனவர்களின் அத்துமீறிய எல்லை தாண்டிய மீன்பிடி தொடர்பாகவும் இதனால் தாம் நாளாந்தம் எதிர்நோக்கி வரும் இடர்பாடுகள் தொடர்பாகவும் இதனை தடுத்து நிறுத்துவதற்கு உரிய தரப்பினர் ஊடாக நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறும் அமைச்சரிடம் கோரிக்கை விடுத்தனர்.


இவற்றை ஆராய்ந்தறிந்து கொண்ட அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அவர்கள், இவ்விடயம் தொடர்பாக ஏற்கனவே தாம் இந்திய மற்றும் தமிழக அரச தரப்பினரிடம் தெரியப்படுத்தி இருந்ததையும் இப்பிரச்சினைக்கு விரைவில் நிரந்தர தீர்வினை எடுக்க வேண்டியதன் அவசியம் குறித்தும் சுட்டிக் காட்டினார்.

அத்துடன், ஏழு பேர் கொண்ட இந்தியக் குழுவினர் தற்போது இலங்கைக்கு வருகை தந்து இவ்விடயம் தொடர்பில் கலந்துரையாட உள்ள நிலையில், அவர்களிடம் வடபகுதி கடற்தொழிலாளர்களது பிரச்சினைகளை எடுத்து விளக்கி சாதகமான முடிவை எட்டுவதற்கான நிலைப்பாட்டை பெற்றுக்கொள்வதே சிறந்த வழி எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

இந்தச் சந்திப்பில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவுடன், நாடாளுமன்ற உறுப்பினர்களான முருகேசு சந்திரகுமார், சில்வேஸ்திரி அலென்ரின் (உதயன்) ஆகியோரும் உடனிருந்தனர்.

## அரசியல்வாதிகளுக்கு....

குமாரதுங்க, எதிர்க்கட்சி தலைவர் ரணில் விக்ரமசிங்க, தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் மற்றும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம் ஆகியோரின் சாட்சியங்களை பதிவு செய்ய நல்லிணக்க ஆணைக் குழு எதிர்பார்ப்பதாக அவர் குறிப்பிட்டார்.



# தடுப்பு முகாமில் இளைஞன் மரணம்; வவுனியா நெளுக்குளத்தில் சம்பவம்

(கொழும்பு)

வவுனியா - நெளுக்குளம் தொழில்நுட்பக் கல்லூரி புனர்வாழ்வு நிலையத்தில் புனர்வாழ்வு பெற்று வந்த இளைஞன் ஒருவர் கிணற்றில் பாய்ந்து மரணமடைந்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. முழங்காவிலைச் சேர்ந்த ஆசீர்வாதம் நியூஸ்டன் என்ற 27 வயதுடைய இளைஞனே கிணற்றில் பாய்ந்து தற்கொலை செய்து கொண்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இவர் கிளிநொச்சி பல்லவராயன்கட்டு கரியாலை நாகபடுவானைச் சேர்ந்தவர் என்பதும், குடும்பத்தில் 7 பிள்ளைகளில் 6 ஆவது பிள்ளை என்பதும் குறிபபிடத்தக்கது.

புலிகளினால் பலவந்தமாக அமைப்பில் சேர்க்கப்பட்டு சுகயீனம் காரணமாக ஒரு மாதத்தின் பின்னர் விடுதலையாகி வந்து வீட்டிலிருந்த இவர், வன்னியில் இருந்து இடம்பெயர்ந்து வந்த போது ஓமந்தையில் ஒரு நாள் புலிகள் இயக்கத்தில் இருந்தாலும் இராணுவத்தினரிடம் சரணடைய வேண்டும் என்ற அறிவித்தலையடுத்து, இராணுவத்தினரிடம் சரணடைந்து புனர்வாழ்வு பெற்று வந்த வேளையிலேயே இவர் இவ்வாறு கிணற்றில் பாய்ந்து தற்கொலை செய்துள்ளார்.

நேற்றுக் காலை 5.30 மணியளவில் இந்தச் சம்பவம் நடைபெற்றுள்ளது. இந்தச் சம்பவம் நடைபெற்ற இடத்திற்குச் சென்று பார்வையிட்ட திடீர் மரண விசாரணை அதிகாரி சிவநாதன் கிஷோர் இறந்தவரின் சடலத்தை வவுனியா வைத்தியசாலைக்கு அனுப்பி மருத்துவ பரிசோதனை நடத்துமாறு பொலிஸாருக்கு உத்தரவிட்டதையடுத்து, வவுனியா சட்ட வைத்திய அதிகாரியினால் மருத்துவ பரிசோதனை நடத்தப்பட்டுள்ளது.

மருத்துவ பரிசோதனை செய்த வவுனியா சட்ட வைத்திய அதிகாரி டாக்டர் ஐ.எம். டபிள்யு.ஆராய்ச்சி தனது மருத்துவ அறிக்கையில் சுவாசப் பையினுள் தண்ணீர் சென்றதனால் ஏற்பட்ட மூச்சுத் திணறல் காரணமாக மரணம் சம்பவித்துள்ளது என்றும் அதிக உயரத்தில் இருந்து விழுந்ததனால், உடலின் உட்காயங்கள் ஏற்பட்டுள்ளதாகத் தெரிவித்துள்ளார்.

விசாரணைகளின் முடிவில் நீரில் மூழ்கியதனால் ஏற்பட்ட மரணம் என தீர்ப்பளித்த மரண விசாரணை அதிகாரி சிவநாதன் கிஷோர், உடலை தாயாரிடம் கைளிக்குமாறு உத்தரவிட்டுள்ளார். (ஜெ)

# சிறுமி மீது துப்பாக்கிச்சூடு; பிரதேச சபை உறுப்பினர் காவலில்

(கொழும்பு)

அண்மையில் நடைபெற்று முடிவடைந்த உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் களனி பிரதேச சபைக்கு ஐ.ம.சு.முன்னணி சார்பில் போட்டியிட்டு புதிதாக தெரிவான பிரதேசசபை உறுப்பினரான சரத்சந்திர டயஸை எதிர்வரும் ஏப்ரல் மாதம் 4 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு கொழும்பு மேலதிக நீதிவான் நேற்று உத்தரவிட்டுள்ளார்.

சக வேட்பாளரின் 5 வயதான மகள் மீது துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டு காயப்படுத்தினாரென்று அவர் மீது குற்றஞ்சாட்டப்பட்டுள்ள நிலையிலேயே அவரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டார்.

தெரிவான உறுப்பினர்கள் பட்டியலில் இவர் கடைசி இடத்தைப் பெற்றதால் ஆத்திரமடைந்திருந்தார் என விசாரணைகள் மூலம் தெரியவந்துள்ளது.

# கொழும்பில் துப்பாக்கிச்சூடு; பொலிஸார் தீவிர விசாரணை

(கொழும்பு)

கொழும்பு ரொபர்ட் குணவர்தன மாவத்தையில் நேற்று முன்தினம் இரவு முச்சக்கர வண்டியில் வந்த ஒருவர் மீது, மோட்டார் சைக்கிளில் வந்த இனந்தெரியாத குழுவினர் துப்பாக்கிப் பிரயோகம் நடத்தியதாக அத்துருகிரிய பொலிஸார் தெரிவித்தனர்.

முச்சக்கர வண்டிச் சாரதியே துப்பாக்கிப் பிரயோகத்திற்கு உள்ளாகியதாகவும் இவரது காலில் காயம் ஏற்பட்ட நிலையில் கொழும்பு தேசிய வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாகவும் பொலிஸார் கூறினர்.

இந்தச் சம்பவம் தொடர்பில் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# சிறுவர் பராமரிப்பு நிலையங்களிலுள்ள 18 வயது நிரம்பியவர்களுக்கு வேலைவாய்ப்பு

## சிறுவர் பாதுகாப்பு சேவை திணைக்களம் நடவடிக்கை

(கொழும்பு)

சிறுவர் பராமரிப்பு நிலையங்களிலுள்ள 18 வயது நிரம்பிய இளைஞர், யுவதிகளுக்கு தனியார் துறைகளில் வேலைவாய்ப்பை பெற்றுக் கொடுக்க பராமரிப்பு மற்றும் சிறுவர் பாதுகாப்புச் சேவை திணைக்களம் நடவடிக்கை எடுத்துள்ளது.

இந்த இளைஞர், யுவதிகளுக்கு வேலைவாய்ப்பை பெற்றுக் கொடுத்தலானது அவர்களுக்கு மட்டுமன்றி, சமூகத்திற்கும் நன்மை அளிக்கும் என அத்திணைக்களம் தெரிவித்துள்ளது.


இதனால் அவர்கள் உரிய முறையில் சமூகத்துடன் ஒன்றிணைவதாகவும் திணைக்களம் சுட்டிக்காட்டியுள்ளது.

அத்துடன், தனியார் துறைகளில் வேலைவாய்ப்புக்கள் காணப்படும் பட்சத்தில் தமக்கு அறிவிக்குமாறு பராமரிப்பு மற்றும் சிறுவர் பாதுகாப்பு சேவை திணைக்களம் கேட்டுக்கொண்டுள்ளது.

அவ்வாறு வேலைவாய்ப்புக்கள் காணப்படும் பட்சத்தில் 0112853549 மற்றும் 0113082483 என்ற தொலைபேசி இலக்கங்களுடன் தொடர்புகொண்டு அறிவிக்க முடியும் என திணைக்களம் தெரிவித்துள்ளது.

# அணுமின் உலைகள் அமைக்கும் திட்டத்தில் பின்வாங்கும் நமது நாட்டு விஞ்ஞானிகள்

## ஜப்பானில் ஏற்பட்ட அணு உலை வெடிப்பின் எதிரொலி



(கொழும்பு)

ஜப்பானில் அணுமின் உலைகளில் ஏற்பட்ட விபத்தினைத் தொடர்ந்து இதுவரை காலமும் இலங்கையில் மின் நிலையம் அமைக்கப்பட வேண்டும் எனக் கூறி வந்த இலங்கை விஞ்ஞானிகள் தற்போது பின்வாங்கத் தொடங்கியுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

ஈரான் நாட்டிலிருந்து கிடைக்கப்பெறும் உதவிகளைக் கொண்டு இலங்கையில் அணுமின் உற்பத்தி நிலையம் அமைக்கும் திட்டத்தை அரசு கொண்டிருந்தது.

ஜப்பானில் ஏற்பட்டுள்ள அணுமின் உலை விபத்தினைத் தொடர்ந்து இலங்கையில் அணுமின் நிலையத்தை அமைக்க வேண்டும் என்பதில் உறுதியான நிலைப்பாட்டில் இருக்கும் அரசாங்கத்திற்கு இதுபற்றி தெளிவுபடுத்தவுள்ளதாக இலங்கையிலுள்ள விஞ்ஞானிகளும் துறைசார் வல்லுநர்களும் தெரிவிக்கின்றனர்.

நாட்டிற்குத் தேவையான மின்வலுவினைப் பெறுவதற்கு மாற்றுத் தெரிவுகள் எதுவுமில்லை என்ற நிலையில்தான் அணுமின் வலுவினை நாட வேண்டுமே தவிர, இலங்கை அரசு அணுமின் சக்தியினைப் பெறுவதற்கு விழுந்தடித்துக் கொண்டு ஓடக்கூடாது என கொழும்பு பல்கலைக்கழகத்தின் பேராசிரியர் ரொஹானி ஹேவமன்ன தெரிவித்துள்ளார்.

இலங்கையில் அணுமின் நிலையத்தினை அமைப்பதற்கான வாய்ப்புகள் தொடர்பாக ஆராய்வதற்கு அமைக்கப்பட்டிருக்கும் செயற்குழுவானது எதிர்வரும் ஏப்ரல் மாதம் மீண்டும் கூடுவதற்கு திட்டமிடப்பட்டுள்ளது.

ஆசியக் கண்டத்தில் 40 அணுமின் நிலையங்கள் அமைக்கப்பட்டுள்ளதுடன், இந்தியாவில் மாத்திரம் 20 அணு மின் உலைகள் இருக்கின்றன. இலங்கைக்கு அருகேயுள்ள தமிழகத்தில் 6 அணுமின் உலைகள் அமைக்கப்படுவதாக அணுசக்தி அதிகாரசபையின் தலைவர் பேராசிரியர் விமலதாச அபயவிக்ரம தெரிவித்துள்ளார்.

## சுவீடன்....

விடுமுறையைக் கழிப்பதற்காக இலங்கைக்கு வந்த அவர், மார்ச் முற்பகுதியில் காணாமல் போனதாகத் தெரிவிக்கப்படுகிறது. தான் தாக்கப்பட்டதாகவும், தன்னிடம் கொள்ளையடிக்கப்பட்ட விடயத்தையும் இவர் கடந்த 5 ஆம் திகதி பேஸ்புக் இணையத்தளத்தில் குறிப்பிட்டுள்ளார். தான் கடத்தப்படலாம் என அஞ்சுவதாகவும் அவர் தெரிவித்திருந்தார்.

கடந்த திங்களன்று இவர் சுவீடனுக்குத் திரும்பவிருந்தமை குறிப்பிடத்தக்கது. எனினும், பின்னர் அவர் காணாமல் போனதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இவர் காணாமல் போனமை குறித்து கடந்த 16 ஆம் திகதி இன்டர்போல் அறிவித்துள்ளது. அத்துடன் சுவீடன் பொலிஸார், வெளிவிவகார அமைச்சு, புதுடில்லியிலுள்ள சுவீடன் தூதரகம் என்பன இவரைத் தேடி வருகின்றன.

## யுத்தத்தின் இறுதி...

என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

2007 முதல் 2009 வரையான காலப்பகுதியில் அமெரிக்கப் பாதுகாப்புத் திணைக்களத்தில் ஆசிய பசுபிக் விவகாரங்களுக்குப் பொறுப்பான பேராசிரியர் ஜேம்ஸ் கிளாட்டினின் சிந்தனையாளர் வட்டத்தில் இணைந்து பணியாற்றியவரே இந்த முன்னாள் புலிகள் இயக்க உறுப்பினர் என்றும் நடேசன் தன்னிடம் கூறியதாக இந்த ஊடகவியலாளர் மேலும் தெரிவித்துள்ளார்.

ஜோன் லீ என்டர்ஸன் என்பவர் பேராசிரியர் ஜேம்ஸ் கிளாட்டை இலங்கையின் நெருங்கிய நண்பர் என்று அண்மையில் நியூயோர்க் டைம்ஸ் பத்திரிகையில் எழுதியுள்ள ஒரு கட்டுரையில் தெரிவித்துள்ளார். மே மாதம் 16ஆம் திகதி நோர்வேயில் உள்ள ஒரு பல்கலைக்கழகப் பேராசிரியரோடு நடேசன் தொடர்பு கொண்டுள்ளார்.

இந்த வெளியேற்றத் திட்டம் பற்றி அவரிடம் விசாரித்துள்ளார். தங்களைக் காப்பாற்ற கப்பல் ஏதும் வருகின்றதா என்றும் வினவியுள்ளார்.

பதிலுக்கு அந்த நோர்வே பேராசிரியர் இலங்கை நேரப்படி நள்ளிரவில் கொழும்பிலுள்ள நோர்வேத் தூதரகத்தை தொடர்பு கொண்டுள்ளார். இத்தகைய ஏற்பாடுகள் பற்றித் தங்களுக்கு எதுவும் தெரியாது என்று இவருக்கு கொழும்பிலுள்ள பதில் தூதுவர் தெரிவித்துள்ளார்.

பின்னர் இது பற்றி நோர்வேத் தூதுவரின் கவனத்துக்குக் கொண்டு வரப்பட்டுள்ளது. அவர் அது குறித்துக் கொழும்பில் இருந்த அப்போதைய அமெரிக்கத் தூதுவர் ரொபர்ட் ஓ பிளேக்கைத் தொடர்பு கொண்டுள்ளார். அதன் பிறகே இவ்வாறான திட்டங்கள் எதுவும் இல்லை என்பது ஊர்ஜிதமாகியுள்ளது.


**AVON International (Private) Limited**

# 138, Kanakaratnam Road, Ariyalai, Jaffna. 40 000

**சர்வதேச விமானப் பயணச் சீட்டுகளுக்கான கட்டண விபரங்கள்**

| | |
|---|---|
| Colombo/Frankfurt/ Colombo | 96 000/= |
| Colombo/Frankfurt | 47 000/= |
| Colombo/London/ Colombo | 86 000/= |
| Colombo/London | 46 700/= |
| Colombo/Madrid/ Colombo | 85 000/= |
| Colombo/Madrid | 49 500/= |
| Colombo/Toronto/ Colombo | 178 000/= |
| Colombo/ Toronto | 75 000/= |
| Colombo/Perth/ Colombo | 109 000/= |
| Colombo/Perth | 61 000/= |
| Colombo/Sydney/ Colombo | 109 000/= |
| Colombo/Sydney | 61 000/= |
| Colombo/Amsterdam/ Colombo | 105 900/= |
| Colombo/Amsterdam | 56 000/= |

உலகின் எப்பாகத்திற்கும் எந்த இடத்திற்கும் செல்வதற்கு மிகக் குறைந்த விலையில் விமானப் பயணச்சீட்டுக்களைப் பெற்றுக்கொள்ள ஒரே இடம்

பயணச்சீட்டு கட்டணங்கள் ஆசனங்களை பொறுத்து மாறுபடும்

(C/622)

AVON International

# 138, Kanakaratnam Road, Ariyalai, Jaffna, 40 000, SriLanka.

T.P: 021 567 6676, 021 567 9679

Hotline:- 0759 115 111 (24 Hrs) avonlk@rocktmail .com.





**UK Visa எடுப்பதில் சிக்கலா?**

பணம் இல்லையே என்று கவலையா?

IELTS தேவையே என்று அஞ்சுகிறீர்களா?

**கவலையை விடுங்கள்!**

மிகக் குறைந்த செலவில் – IELTS இல்லாமலே

UK செல்ல அரிய வாய்ப்பு!

மலேசியாவில் UK பட்டக்கல்வியைப் பெற்று அங்கிருந்து இலகுவாக UK செல்லுங்கள்

இது எப்படிச் சாத்தியம்? மலேசிய அரசாங்கத்தினதும், 10க்கும் மேற்பட்ட UK, Canada பல்கலைக்கழகங்களினதும் அங்கீகாரம் பெற்ற

Legenda Education Group



பிரதிநிதி சஜீப் உடனான

**இலவச கலந்துரையாடலுக்கு வாருங்கள்**

இன்று செவ்வாய்கிழமை

காலை 10மணி: சிகரம் ஊடக இல்லம், இல.221, பலாலி வீதி, கந்தர்மடம்

பிற்பகல் 2மணி: தியாகி அறக்கொடை நிலைய மண்டபம், இல.527, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.

மேலதிக விபரங்களுக்கு அழையுங்கள்

(C/152) 0773 616 798, 021 300 80 60


இப்பத்திரிகை இல.373 பிரதான வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் அமைந்துள்ள அற்புதன் அச்சகத்தில் 2011 மார்ச் 22 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.